நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

for Young friends of fmpb

FRIENDS MISSIONARY PRAYER BAND

இளைஞர் மாத இதழ்

களத்தில் 2026 வீரியம்

# செயல் களத்தில் ஜீவனை அர்ப்பணிப்போம்!



Vol 37-Issue 4 - April- 2026

Private circulation only

# கிறிஸ்துவின் மரணமும், அதின் மேன்மையும்



REV. SELVINRAJ G CHARLES

எபிரெய புத்தகத்திலிருந்து கிறிஸ்து - துதிக் களம்

தேவன் நியமித்த தேர்வில் ஆதாம் சாத்தானின் வஞ்சனையால் தோல்வியடைகிறான். ஆனால் இதினிமித்தம் தேவன் மனித இனத்தைக் கைவிடவுமில்லை, புறக்கணிக்கவும் இல்லை. அவனை மீட்க ஒரு மனிதனாக இந்த உலகத்திற்கு வந்தார். முதலாம் ஆதாம் ஏதேன் தோட்டத்தில் இழந்த அனைத்தையும் இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து கொல்கொதாவில் (சிலுவை மரணம்) மீட்டுக்கொண்டார். சிலுவைப் பாடுகளைப் பற்றி திருச்சபை சிந்திக்கும் இந்த மாதத்தில், கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மேன்மையை நாம் அறிந்துக்கொண்டு அவரைத் துதிப்போம் வாருங்கள்!

- **கிறிஸ்து நமக்காக மரணத்தை ருசி பார்த்தார் (Christ Tasted Death for Us):**

தேவனுடைய கிருபையால் நமக்காக கிறிஸ்து மரணத்தை ருசிபார்க்க தேவ தூதரிலும் சற்று சிறியவராக மரித்து மகிமையினாலும், கனத்தினாலும் முடி சூட்டப்பட்டதைப் பார்த்து, அவரை நன்றியுடன் துதிப்போம் (எபி. 2:9). இது கிறிஸ்துவின் தேவ கிருபையின் வெளிப்பாடு. நான் பாவியாக இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார். இது தேவ அன்பை நமக்கு வெளிப்படுத்துகிறது. எவ்விதத்திலும் தகுதியில்லாத மனிதன் மேல் தேவன் பாராட்டும் அன்பே கிருபை ஆகும்.

ஏதேன்துவங்கி - கல்வாரி வரை பலியாக பல்வேறு காலக்கட்டங்களில் சிந்தப்பட்ட ஒவ்வொரு சொட்டு இரத்தம் தான் கிருபையாகும். நமக்காக மரணத்தை ஏற்றுக்கொண்ட தேவனைத் துதிப்போம்.

- **கிறிஸ்துவின் மரணம் நம் பாவத்திற்காக (Christ's Death for our Sins):**

கிறிஸ்து வேதனை நிறைந்த மரணத்தை ருசி பார்த்தார். அந்த மரணத்தின் பாடுகளை விவரிக்க எந்த பாஷையிலும் வார்த்தையில்லை. அவர் (கிறிஸ்து) மரணத்தை உத்தரித்தார். இப்படியாக அவர் தேவதூதரிலும் சிறியவராக்கப்பட்டார். தேவதூதர்கள் பாடுகளையும், மரணத்தையும் ஒருபோதும் சந்திக்கவில்லை. ஆனால் கிறிஸ்துவோ "அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச்செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" (தீத்து 2:14). நம் பாவங்களுக்காக மரணத்துக்கு தன்னை ஒப்புக்கொடுத்தவரைத் துதிப்போம்.

- **கிறிஸ்துவின் மரணத்தால் - மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்பட்டார் (Christ was Crowned with Glory and Honor by his Death):**

ஆண்டவராகிய இயேசுவின் மனுஷீகத் தன்மையை அறிவிக்கும் அவருடைய "இயேசு" என்ற பெயர். இயேசு என்ற வார்த்தைக்கு இரட்சகர் என பொருள். பவுல் சவுலாயிருந்த நாட்களில் இந்த வார்த்தையை விரும்பியிருக்கமாட்டார் என்பதால் முதல் முறையாக பவுலுக்குத் தன்னை வெளிப்படுத்தியபோது "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" (அப். 9:5) என்று தன்னை அறிமுகப்படுத்தினார். கிறிஸ்து நம்மைப்போல் ஒரு பாவ மனிதனானார், பாடுபட்டார், அடக்கம் பண்ணப்பட்டார். தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டவர், இன்று மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்பட்டு பரலோக சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்.

அதாவது கிறிஸ்து மரித்து அடக்கம்பண்ணப்பட்டவராகவே இருந்திருப்பாரேயானால் கனத்தினாலும், மகிமையினாலும் அவர் முடிசூட்டப்பட்டிருக்க முடியாது. கிறிஸ்து முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம் என்று பவுல் சொன்னது, அவர் அதைத் தன்னுடைய ஆவிக்குரிய கண்களினால் கண்டார் என்பது தான் உண்மை. அதற்காக இயேசுவைத் துதிப்போம். இதுபோல் அநேக பிள்ளைகளை மகிமைக்குள் பிரவேசிக்கச் செய்ய வேண்டும் என்பதே பிதாவினுடைய விருப்பமாகும். மகிமையில் சேரும்படியாக நாம் ஒருபோதும் முன் வருவதில்லை. ஆனால் அவர் தான் நம்மைத் தேடி வந்தார். பாவம் செய்த ஆதாமைத் தேடி தேவனே வந்தார். "நீ எங்கே இருக்கிறாய்" (ஆதி. 3:9) என்றார். சிருஷ்டிப்பின் நாளில் மனிதன் மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்பட்டிருந்தான். ஆனால் ஆதாமின் பாவத்தால் மனிதன் அதை இழந்தான். இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் இந்த உலகத்திற்கு வந்தார்.

சகலமும் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதே தேவனின் திட்டம். ஆகவே அவரைத் துதிப்போம் வாருங்கள்!

தன்னுடைய மகிமையை நமக்கு பகிர்ந்துக்கொள்ள விரும்பின தேவனைத் துதியுங்கள்!
தம்முடைய ஒரேபேறான குமாரனைப் பாடு, மரணத்திற்கு ஒப்புக்கொடுத்த தேவனைத் துதியுங்கள்!
நம் பாவத்திற்காக ஒரே தரம் பாடுபட்டு, மரித்து, உயிரோடெழும்பினவரைத் துதியுங்கள்!

தன்னுடைய பாடு, மரணம் மூலமாகவே கிறிஸ்து அவருக்கு முன் வைக்கப்பட்ட மிக பெரிய இலக்கை அடைந்தார். ஆமென்!

## நீ எங்கே இருக்கிறாய்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

## VISION

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

## OBJECTIVE

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth Wing**

www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266

**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX

இளம் வாலிபர்களின் அறிவியல் களம் - Set Square 450 - 5
சிறுவர் ஊழியத்தில் களம் கண்ட பரிசுத்தவாட்டி - கார் ஆச்சி - 6 & 7
அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள் - கர்நாடகா மாநிலம் - 9
போதைப் பொருள் பயன்பாட்டுக் கோளாறு - 12
Mafia Mania - 14
உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா? - 15
ஞானத்துடன் காத்திருக்கிறேன் - 20
கனம் பெற்ற (அரிமத்தியா) யோசேப்பு - 22

# செயல் களத்தில் ஜீவனை அர்ப்பணிப்போம்!

உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

**ஜிம் எலியட்**

நமது இயக்கத்தின் முன்னாள் பொது காரியதரிசி திரு. பேட்ரிக் ஜாஷ்வா அண்ணன் அவர்களின் மூன்றாவது மகனாக பிறந்தவர் ஜிம் எலியட். 23 வயதான இவர், தன்னுடைய இளம் வயதை தேவையுள்ள நமது தேச மக்களாகிய ஜார்கண்ட் மாநிலத்தில் வசித்து வரும் மால்தோ மக்களுக்காக அர்ப்பணித்தார்.

மால்தோ மக்கள் மலேரியா, காலரா, T.B போன்ற வியாதிகளால் அழிந்துவருவதைக் கேள்விப்பட்ட ஜிம் எலியட், அம்மக்களை அழிவிலிருந்து காப்பாற்றிட முன்வந்தார்.

ஜிம் நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்தவர். மேலும், தனது வாழ்க்கையை அனைத்து விதத்திலும் வசதியாக அமைத்துக் கொள்ள வாய்ப்புகள் இருந்தபோதிலும், அவற்றையெல்லாம் விரும்பாமல், மால்தோ மக்களின் நல்வாழ்விற்காக தன்னுடைய ஜீவனை அர்ப்பணித்தார். ரோமர் 12:1இன்படி தேவனுடைய இரக்கத்திற்கு பதிலளிக்கும் விதமாக ஜிம் தன்னை ஜீவபலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார்.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு முதலும், முக்கியமானதுமான பணி எது? நமது சரீரங்களைத் தேவனுக்கு ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதுதான். பவுல் சரீரம் என்று சொல்லும்போது நமது ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற முழு மனிதனையும் குறிப்பிடுகிறார். நாம் ஒப்புக்கொடுக்க வேண்டிய சரீரம் ஜீவனுள்ளதாக, கறையற்றதாக இருக்க வேண்டும். தேவனுடைய இரக்கத்திற்குப் பதிலளிக்கும் விதமாக நாம் நமது சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்க வேண்டும். ஏனென்றால், இயேசுகிறிஸ்து தமது சரீரத்தை நமக்காகப் பலியாக ஒப்புக்கொடுத்தார். இதுதான் தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் ஆவிக்குரிய ஆராதனை. இப்படிப்பட்ட பலி அவருக்கு பரிசுத்தமும், பிரியமுமாயிருக்கும். அன்பான வாலிபர்களே! அவர் நமக்காக செய்திருப்பதுடன் ஒப்பிட்டு பார்த்தால், நாம் அவருக்காக செய்வதெல்லாம் மிகமிகக் குறைவே! எனவே, நீங்கள் இந்த இளம் வயதில் ஜீவனை அவருக்கென்று அர்ப்பணியுங்கள்.

LEAD Training Programme மிகவும் பயனுள்ளதாக இருந்தது. ஆண்டவருடைய கிருபையால் 55 வாலிபத் தலைவர்கள் பங்கு பெற்று பயனடைந்தனர். மார்ச் மாதம் பம்மல் பகுதியில் புதிதாக Youth Fellowship ஆரம்பிக்க கர்த்தர் கிருபைச்செய்தார். மே 21ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை சேலம், டேனிஷ்பேட்டை பெத்தேல் வளாகத்தில் நடைபெறவுள்ள தமிழ் மாநில முகாமிற்காக ஜெபியுங்கள். இந்த ஆண்டு சுமார் 1000 வாலிபர்கள் கலந்துக்கொள்ள வேண்டும். உங்களை அன்புடன் அழைக்கிறோம். உங்கள் நண்பர்களையும் அழைத்து வாருங்கள்!

கர்த்தர்தாமே உங்களை அபரிமிதமாய் ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்
*ஜெ. டேனியல் அருள்மணி*



# ஆளும் வம்சம் யூதா

REV. DANIEL GNANAPRAGASAM



ஆளுகை என்பது ஒரு தேசத்தை ஆட்சி செய்தல் (or) வழி நடத்துதல் என்பதாகும். திறந்த மனது, மனசாட்சி, துணிச்சல், ஒத்துழைக்க விருப்பம் மற்றும் பதட்டத்தைக் கையாளுதல் போன்றவை சிறந்த ஆளுமைப் பண்புகளாகக் கருதப்படுகிறது. யாக்கோபுவின் 4வது மகனான யூதா, தன் சகோதரர்களுக்குள்ளே சிறந்த தலைமைப் பண்புகளையும், ஆளுமையையும் பெற்ற நபராக காணப்படுகிறார்.

யூதா என்ற பெயருக்கு துதி (or) புகழ் என்று பொருள். லேயாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, இப்பொழுது *"கர்த்தரைத் துதிப்பேன்"* என்று சொல்லி யூதா என்று பேரிட்டாள் (ஆதி. 29:35). ஒரு குறைபாடுள்ள நிலையிலிருந்து பொறுப்பான, தியாக மனதுடன், தைரியமான தலைவராக, பரிணமித்த ஒரு நபராக யூதா வேதாகமத்தில் அறியப்படுகிறார். ஆளும் வம்சமாக அறியப்பட்ட யூதா கோத்திரத்தைக் குறித்து இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

### *யூதாவின் மனநிலையும், சுபாவமும்:*

அநேக நேரங்களில் யூதாவிடம் ஒரு சுயநல நோக்கம் வெளிப்படுவதை நாம் காண முடியும். யோசேப்பை 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போடுவதை விரும்பிய மனிதராகவும் (ஆதி. 37: 26-28), தன் சகோதரரை விட்டுப் பிரிந்து, அந்நிய கானானிய பெண்ணைத் திருமணம் செய்வதையும், பின்பு அவனுடைய மருமகளாகிய தாமாரைத் திருமணத்தில் வஞ்சிப்பதையும் ஆதி. 38இல் பார்க்கிறோம். இப்படிப்பட்ட சுயநலத்தன்மை இருந்தபோதிலும், நிகழ்ந்துவிட்ட தவறுகளைச் சரிசெய்யும் சுய திருத்தத்திற்கான (Self Correction) சிறந்தத் திறனுடனும் யூதா விளங்கினார்.

யோசேப்பினிமித்தம் தகப்பன் யாக்கோபுவிற்கு ஏற்பட்ட வருத்தங்களும், வேதனைகளும் மீண்டும் ஒரு சூழலில் நிகழ்ந்து விடக்கூடாது என்பதில் யூதா மனசாட்சி கொண்டவராக இருந்தார். பென்யமீனின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தன்னை ஒப்புவித்து, தன் குடும்பத்தின் சமரட்சனைக்காக ஆழ்ந்த அர்ப்பணிப்பைக் காட்டினார் (ஆதி. 43:1-9). யோசேப்பின் மீது கொண்ட வெறுப்பை பென்யமீனின் மீதான அக்கறையாக வெளிப்படுத்தி அவனுக்காக மன்றாடினார் (ஆதி. 44:33). இப்படிப்பட்ட யூதாவின் சுயநல நோக்கம் சீர்தூக்கி பார்க்கப்படும்போது பின்னாளில் பலரின் விடுதலைக்கும், நன்மைகளுக்குமான தெய்வீகத் திட்டங்களாக மாற்றம்பெறுகிறது. If you make a mistake, correct it don't justify it.

### *தகப்பனின் ஆசீர்வாதம் (ஆதி. 48:8–10):*

யோசேப்பைக் கொலை செய்தல் என்ற குற்றத்திலிருந்து தன்னையும், தன் சகோதரர்களையும் விடுவித்துக்கொண்ட யூதாவின் செயல், பின்னாளில் அந்த யோசேப்பினால் தன் குடும்பத்தைக் காத்துக்கொள்ளும் தேவத்திட்டத்தை வெளிப்படுத்தியது (ஆதி. 45:5). தாமாருக்கு இழைத்தத் தீங்கை உணர்ந்து அவளைச் சேர்த்துக்கொண்ட செயல் இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறுக்குக் காரணமானது (மத். 1:3). யூதா பெற்றுக்கொண்ட இந்த சிறப்புகளை தகப்பனின் ஆசீர்வாதக் கூறலில் நாம் காண முடியும்.

யூதாவிற்கு தகப்பன் யாக்கோபு கொடுத்த ஆசீர்வாதங்களில் நான்கு உள்ளடக்கங்கள் உள்ளன.

1. தன் சகோதரர்களால் புகழப்படுதல் மற்றும் பணிந்து கொள்ளப்படுதல்.
2. எதிரியின் பிடரியின் மேலிருக்கும் அவனது கரம். இது எதிராளியின் தோல்வியை உறுதிசெய்யும் அடையாளம்.
3. தொட முடியாத அதிகாரத்தோடு ஆளுகைச் செய்யும் ராஜசிங்கம்.
4. உலகளாவிய மக்கள் தங்கள் கீழ்ப்படிதலுடன் சமாதான கர்த்தரை வந்து சேருதல்.

### *தலைவனின் தரிசனம் (உபா. 33:7):*


ஆதிக்கம் செலுத்தும் கோத்திரமாக இக்கோத்திரத்தை அறிய முடிகிறது. வனாந்தரப் பயணத்தில் யூதா கோத்திரமே முதலில் சென்றது (எண். 10:14). தங்கள் பங்கை முதலில் பெற்றவர்கள் இக்கோத்திரத்தாரே (யோசுவா 15:1).

தலைவன் மோசேயின் ஆசீர்வாதமானது இரண்டு உள்ளடக்கங்களை கொண்டுள்ளது.

1. யூதாவின் சத்தத்தைக்கேட்டு, யூதாவை அவன் ஜனத்தோடே திரும்ப சேரப்பண்ணுதல். இது இஸ்ரவேல் மக்களின் ஒற்றுமைக்கான மோசேயின் வேண்டுகோளாக உள்ளது.
2. எதிரிகளுக்கு எதிராக யூதாவின் கைகள் பலப்படுத்தப்படும்படியான மோசேயின் விண்ணப்பங்களாக உள்ளது.

-இதன் தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# SET SQUARE 45°



இளம் வாலிபர் பகுதி - அறிவியல் களம்

MRS. JOYLINE JEROME

*My dear teen Boys and Girls, happy April month greetings to you and your family.*

இந்த month ஒரு முக்கியமான விஷயத்தை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. அது இயேசுகிறிஸ்துவோட Death, Burial and Resurrection. இதுதான் நம்மளோட christian discipline lifestyleலுக்கான base. அதனால இத பத்தி storyஆ மட்டும் தெரிஞ்சுக்காம, இன்னும் ஆழமா வேதாகமத்தைத் தியானம் பண்ணுங்க. உங்க lifestyleஅ Christஅ centreஆ வைக்க உதவியாயிருக்கும். உங்களில் சிலருக்கு exam முடிஞ்சிருக்கும். சிலருக்கு ending stageல இருக்கும். எப்படின்னாலும் next 15 minutes undivided attentionனோடு சில விஷயங்களைக் கத்துக்கலாமா? இந்த Teen pageயோட Plan நீங்க அடிக்கடி use பண்ற Geometry Boxல இருக்குற things தான். Last 3 monthsஆ Compass, Divider & Protractorகளைப் பத்தி பார்த்தோம். அந்தபடி இந்த month நாம பார்க்கப்போறது Set Square 45°.

Basically Set Square 45° is a triangle shaped ruler. இதுல மூன்று angles இருக்கும். 45°, 45° & 90° three anglesன்னு சொல்லிட்டு, 2 times 45° எழுதியிருக்குனு நினைக்கிறீங்களா? இப்படி இரண்டு equal angles 45°and 45° இருந்துச்சுன்னா, அது isosceles right triangle. Set square வச்சி, directஆ 45° projection linesஅ protractor இல்லாமலே வரைய முடியும். Orthographic projectionல வர்ற எல்லா parallel and perpendicular linesல இத வச்சு ரொம்ப easyஅ வரைய முடியும்.

இதோட application architecture and construction drawingsல வர்ற walls, corners, stopped roofன்னு எல்லாத்தையும் exactஆ வரையறதுக்கு use ஆகுது. இப்போல்லாம் modernஆ computer drafting பண்ணினாலும், anglesஅ quickஆ planல check பண்ணுறதுக்கு set square 45° usefulஆ இருக்குது. இத smartஆ use பண்ணினா examல அதிக நேரம் சேமிக்கலாம். எப்படின்னா சில angles 45°, 75°, 105°, 120°, 135° protractor இல்லாமலே ரெண்டு set square வச்சு quickஆ வரைய முடியும்.

Okay, இப்ப Bible application time, set square 45°, நமக்கு two things சொல்லி தருது. அது Exactness, Consistency. Bible approximateஆ ஒரு 4000 years' historyய நம்ம கண்முன் காட்டுது. சுமார் 1500-2000 yearsல 40க்கும் மேல் authors, இதுல writersஆ contribute பண்ணியிருக்காங்க. இந்த author's எல்லாருமே வேறவேற centuryல, வேறவேற situationல இருந்து எழுதினாங்க. மேலும் இந்த author's எல்லாருமே வேறவேற personalityல இருந்தாங்க. சிலரு King, Shepherd, Peasant, Farmer, Scholerன்னு இருந்தாங்க. இவ்வளோ variations இருந்தாலும், Bibleஇல் உள்ள ஒவ்வொரு bookஇன் core messageயும் exactly sameஆ தான் இருக்கு. ஒரு analogyயை வச்சு இத இன்னும் deeperஆ understand பண்ணுவோமா? Bibleல இருக்கிற 66 Bookயும், 66 Beads or Pearls. இத ஒரு beautiful chainஆ connect பண்ணுற string தான் 'Christ'. Old Testmentல இருக்கிற எல்லா booksலையும் Christ, Shadowவா இருப்பாங்க. அத நாம தான் deeperஆ தேடி கண்டுபிடிக்கனும். ஆனா New Testamentல, Christ has become flesh as Jesus. அதனால New Testament நமக்கு அதிகமா connect ஆகுது. இப்படி OTன்னாலும், NTன்னாலும் Bibleளோட exactnessல ஒரு changeயும் இல்லை. அது அதிக firmஆ ஒரு செய்திய சொல்லிட்டே இருக்குது.

அடுத்தது Consistency, Bibleளோட எல்லா Booksயுமே consistentஆ ஒரே ஒரு செய்திய தான் சொல்லுது. அந்த செய்தி இந்த முழு உலகமும் இரட்சிப்படைய வேண்டியதன் திட்டமாகும். இப்படி consistentஆ இருக்கிறதுக்கு முக்கியமான காரணம், இப்படி 40க்கும் மேல authors இருந்தாலும், இவங்களுக்கு இந்த authorship share பண்ணின ஒரே primary author கர்த்தராகிய தேவன். இது கூடவே பரிசுத்த ஆவியானவருடைய உதவியோட தேவனுடைய திட்டத்தைப் பற்றி consistentஆ எழுதினாங்க. இத பத்தி apostle Paul, Timothyக்கு சொல்லுறத கவனிங்க. "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோ. 3:16, 17). Simpleஆ இந்த வசனம் என்ன சொல்லுதுனா, Bible is consistent and unified.

So, teens இந்த April Monthலேயும் இன்னும் அதிகமா Bible படிக்க ஆரம்பியுங்க. OTல Christயோட Shadow எங்கெல்லாம் வருதுன்னு கண்டுபிடிச்சி உங்க Fellowshipல discuss பண்ணுங்க. அதுல ஏதாவது doubt இருந்தா Daniel Arulmani அண்ணனுக்கு, Whatappயில் 9445040148 என்ற நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு உதவிசெய்ய ஆயத்தமாயுள்ளோம்.

*Until then see you next month. Bye!!!*

# சிறுவர் ஊழியத்தில் களம் கண்ட பரிசுத்தவாட்டி

# கார் ஆச்சி



MR. ISAAC KAMALESH

ஐ! வெள்ளைக்காரி, வெள்ளைக்காரி... என்ற சிறுவர்களின் உற்சாகம் ஒருபுறம். ஐயய!! பொம்பள கார் ஓட்டுதுன்னு சலித்துக்கொண்ட பெருசுகள் ஒருபுறம். ஏன் வெள்ளைக்காரம்மா, பெரியம்மா, கார் ஆச்சி, MUM என பல பெயர்களில் 1950கள் முதல், தென்தமிழகத்தில் உச்சரிக்கப்பட்ட பெயருக்கு சொந்தக்காரியான மிஷனெரியைத் தான் இந்த மாதம் நாம் அறிந்துக்கொள்ள இருக்கிறோம்.

ஆம்! அமெரிக்க ஐக்கிய நாட்டின் மின்னியபோலிஸ் எனும் அழகு எழில்மிகு நகரம். இந்நகரத்திற்கு ஏரிகளின் நகரம், கலைகளின் நகரம் என்ற பெயர்களும் உண்டு. மிஸிஸிப்பி நதிக்கரையின் ஓரம் அமைந்த இந்த நகரம் கலை அம்சங்களுக்கு மட்டுமல்லாமல், வேதாகம இயக்கங்களும் இடம்பெற்ற முக்கிய நகரமாய் விளங்கியது. இங்குதான் ரேய் மார்கன் மற்றும் ஐடா பெர்ல் மார்கன் தம்பதிகளுக்கு பிறந்த முதல் மகள் தான் “ஈடித் பெர்ல் மார்கன்”. E. P. மார்கனின் பெற்றோர் கடவுள் பயமும், சுவிசேஷப்பணி தாகமும் கொண்டு இரட்சிப்பின் நிச்சயத்தோடு வளர்ந்த தம்பதியினர். E. P. மார்கன் 1912 ஜுன் 14ஆம் தேதி பிறந்தாள். அதன் பிறகு மேலும் இரண்டு பெண் பிள்ளைகள் பிறந்தனர். மூன்று பெண் பிள்ளைகளையும் தங்களை மீட்ட கிறிஸ்துவின் அன்பைப் புகட்டியே வளர்த்தனர். குட்டி ஈடித்துக்குப் பாட்டு, கதை என்றால் அலாதிப் பிரியம். ஓய்வு நாள் பாடசாலையில் அங்கிள் ஜார்ஜ் விறுவிறுப்பாக கதை சொல்லுவார். இது ஈடித்துக்கு மிகவும் பிரியம். அவளுக்கு வயது 8, மார்கன் குடும்பம் ஆராதித்து வந்த மெதடிஸ்ட் ஆலயத்தில் எழுப்புதல் நற்செய்தி கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. எழுப்புதல் பிரசங்கியார் வேறு யாருமல்ல அங்கிள் ஜார்ஜ் தான். செய்தியின் கடைசியில் அங்கிள் ஜார்ஜ் அழைப்பு விடுத்தபோது முன் செல்ல தைரியமில்லாமல் ஈடித் தவித்த தவிப்பு கொஞ்சமல்ல. அன்று இரவு தன் அம்மாவிடம் அதைப் பகிர்ந்துகொள்ள, பெற்றோர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மேலும் தன் மகள் தன்னை ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்க வயது ஒரு தடையில்லை என்று உற்சாகமூட்டினர். மறுநாள் நடைபெறும் எழுப்புதல் கூட்டத்திற்காக ஈடித் காத்திருந்தாள். அந்த நாளும் வந்தது. கூடுகையின் முடிவில் தேவப்பணிக்கென்று அழைப்பு கொடுக்கப்பட்டது. E. P மார்கன் என்ற ஈடித் தன்னை தேவப்பணிக்கென்று ஒப்புகொடுத்தாள். அன்று துவங்கி “நான் ஊழியக்காரியாவேன்” என்று சொல்லி திரிந்தாள்.

இந்த ஈடித்தின் அர்ப்பணத்தையும், கீழ்படிதலையும் கனம் பண்ணின கர்த்தர் இவளைக்கொண்டு இந்தியாவில் முதன்முதலில் V.B.S ஊழியத்தை ஆரம்பித்தார் என்றால் எத்தனை பிரமிப்பு. ஆம் 1952ஆம் ஆண்டு தென் தமிழகத்தின் ஓர் சிறு பட்டணமான (அன்று கிராமம்) கோவில்பட்டியில் மே மாதம் உதயமானது இந்த அற்புத ஊழியம். ஆம், இந்தியாவில் எத்தனையோ ஊழியங்கள் அனைத்து தரப்பு மக்கள் மத்தியிலும் விதவிதமாக நடைபெற்றாலும், சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் இந்த V.B.S ஊழியத்தின் வெற்றி சதவிகிதத்திற்கு இணையாக இன்றுவரை எந்த ஊழியமும் வரவில்லை என்பதுதான் நிதர்சன உண்மை.

இந்த நேரத்தில் நம் இயக்கத்தோடு தொடர்புடைய ஒரு சில அண்ணன்மார்களை நினைவு கூர்ந்தே ஆக வேண்டும். அதில் முதலாவது P. சாமுவேல், இவர் கோவில்பட்டி கிராமத்தில் இறைச்சி வியாபாரம் செய்து வந்த பிச்சைமுத்து என்ற கசாப்பு கடைக்காரரின் மகன். தேவ அழைப்பைப்பெற்று இந்திய இராணுவப்பணியை உதறித் தள்ளிவிட்டு, இராஜாவின் பணியைத் தேர்ந்தெடுத்ததால் தன் தகப்பனாரினால் வீட்டை விட்டு துரத்தப்பட்டவர், பின்னாளில் வேதம் கற்க SIBI பங்காரப்பேட்டையில் சேர்ந்தார். இங்குதான் ஊழியக்காரர்களான ஈடித் பெர்ல் மார்கன் மற்றும் ஹேமில்டன் தம்பதிகளின் அறிமுகம் கிடைத்தது. P. சாமின் துடிப்பு, கர்த்தருக்கான வைராக்கியம் ஈடித்தையும், ஹேமில்டன்

தம்பதியினரையும் வெகுவாக கவர்ந்தது. இவர்தான் தன்னுடைய திருச்சபையில் வைத்து முதன்முதலில் V.B.S ஆரம்பிக்கக் காரணமானார்.

1952 மே மாதம் V.B.S ஊழியச்செய்தி மற்றும் அதன் கனிகள் ஆங்காங்கே பரவ 1953ஆம் ஆண்டு தூத்துக்குடியில் ஆரம்பிக்க அழைப்பு வந்தது. அதன்படி தூத்துக்குடியில் இரண்டு இடங்களிலும், கோவில்பட்டியிலும் சேர்த்து மூன்று இடங்களில் 500 மாணவர்கள் V.B.Sயில் பங்கு பெற்றனர். 1954 மே மாதம் பாளையங்கோட்டையிலும் இந்த ஊழியம் ஆரம்பமானது. V.B.S ஆசிரியர்களாக பெரியண்ணா தியோடர் வில்லியம்ஸ், சின்னண்ணா சாம் கமலேசன் பேர் பெற்றவர்கள். இந்த V.B.S ஊழியம் வளர்ந்து எங்கும் பரவத் துவங்கியது. இதில் ஈடுபட்ட இளைஞர்கள் மே மாத ஊழியத்தை முடித்துவிட்டு முறையாக பின் தொடர் பணியையும், ஜெபக்குழுவையும் நடத்தினர். இந்த ஐக்கியமே நண்பர்கள் ஜெபக்குழு என்றும், பின்னர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு என்றும் பதிவு செய்யப்பட்டது.

நாம் மீண்டும் ஈடித் வாழ்க்கைக்குள் செல்வோம். 1935ஆம் ஆண்டில் தனது 23வது வயதில் பட்டப்படிப்பை முடித்த கையோடு வேதாகமக் கல்வி பயில ஆசைப்பட்டாள். ஆனால் பணப் பற்றாக்குறை காரணமாக அவளது தந்தை மறுத்துவிட்டார். பின், 1936இல் சிகாகோ இவாஞ்சலிக்கன் இன்ஸ்டியூட்டில் முதுகலை படித்தார். ஈடித் தன் முதுகலைப் படிப்பிற்கு வாங்கியக் கடனை அடைக்க ஆசிரியர் பணியில் இணைந்தார். இரு வருடங்கள் உழைத்து உவால்ட்டரிடம் வாங்கிய கடனை அடைத்தார். ஆனால் அவளது இலட்சியம் இந்தியாவிற்கு ஊழியக்காரியாக போக வேண்டும் என்பதே. ஆகவே விரைவாக கடனை அடைத்துவிட்டு இந்தியா செல்ல வேண்டும் என்ற உந்துதலால் தாதித்தொழிலையும் சந்தோஷமாக ஏற்று உழைத்தாள் என்றால் அவளது “இந்தியா” குறித்த தாகம், தரிசனம் எத்தனை பெரியது என்பதை விவரிக்கத் தேவையில்லை.

தான் அங்கம் வகித்த சங்கத்தில் இந்திய ஊழியத்திற்கான வாசல் திறக்கப்படாததால் 1941-1943 வரை கென்டக்கியில் வேலை செய்தார், பின் 1943-1946 வரை மெத்தடிஸ்ட் சபையைச் சார்ந்த மிஷன் பள்ளியில் ஆசிரியராகப் பணியமர்ந்தார். இந்த வருடங்களில் மெத்தடிஸ்ட் சபை ஸ்தாபகரான ஜான் வெஸ்லியின் மிக முக்கிய போதனைகளான ஜெபக்குழுக்கள், வீடு சந்திப்பு போன்ற பிரசங்கங்களில் ஈடித் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள். ஈடித் தனது 32வது வயதில் 1944இல் உலக நற்செய்தி ஊழியத்தின் மாநில முகாமில் தன்னை இந்தியாவிற்கான மிஷனெரியாக மீண்டும் அர்ப்பணித்தாள். ஏப்ரல் 22இல் நடந்த செயற்குழுவில் பல போராட்டங்களுக்குப் பின் ஈடித்தை இந்தியாவிற்கு மிஷனெரியாக அனுப்ப முடிவெடுத்தனர். அன்று துவங்கி ஈடித் தான் நடத்திய ஜெபக்குழுக்களை முறையாக பிறரிடம் ஒப்படைத்துவிட்டு, தனது சொந்த ஊரான மின்னியபோலிஸ் ரயில் நிலையம் வந்து நியூயார்க் செல்ல வந்த ஈடித்தை தெரிந்தோர், தெரியாதோர் என அநேகர் வந்து வழியனுப்பினர். அன்று தான் தன் தந்தை கண்ணீர் வடித்ததை ஈடித் பார்த்தாள். ஆனாலும் “இந்தியா” என்ற தரிசனம் வெற்றி பெற்றது.

நியூயார்க் பட்டணத்தில் ஈடித்துடன் மேரி, எஸ்தர், வெர்ஜீனியா என்ற மற்ற மூன்று இளம் பெண்களும் இணைந்துக்கொண்டனர். அறிவிப்பு வந்தது உலக மகா யுத்தம் நடந்த நாட்களில், அமெரிக்காவிலிருந்து மத்திய தரைக்கடல் மார்க்கமாக செல்லும் முதல் போர்க்கப்பலில் இந்தியா செல்லவிருக்கும் இந்த நான்கு பெண்களும் பயணிக்க வேண்டும் என்பதே அந்த அறிவிப்பு. அது சரக்கு கப்பலோ, பயணக் கப்பலோ அல்ல. பாகிஸ்தானின் சிந்து துறைமுகத்தில் காத்து நிற்கும் போர் வீரர்களைச் சுமந்துவர பயணிக்கும் கப்பல். தேவன் தன் பிள்ளைகளுக்கு ஏற்படுத்தி வைத்த விசேஷ கப்பல். சிந்து துறைமுகத்திலிருந்து இந்தியா கப்பல் பயணம், இந்த நான்கு பெண்களின் பொறுப்பு என்பது கவனிக்கப்பட வேண்டியது. 1945 ஜூலை முதலாம் நாள் விடியற்காலை மும்பை துறைமுகம் வந்தடைந்தனர். பின் இரயில்மார்க்கமாய் சென்னை வந்து அன்று இரவே பங்காருபேட்டை SIBI வேதாகம நிறுவனம் வந்தடைந்தனர். அப்போது ஈடித்துக்குத் தாய் வீட்டிற்கு வந்த உணர்வு ஏற்பட்டது. அன்றே ஊழியத்தை ஆரம்பித்தாள். வேதாகமப் பள்ளியின் மாணவர்கள் யாவர் முகத்திலும் மன்னன் இயேசுவின் பிரகாசம் ஜொலித்தது. இக்கூட்டத்தின் ஓர் இளைஞன்தான் நாம் முதலில் பார்த்த P. சாம். இந்த P.சாம் அண்ணனைக் கொண்டு தான் தேவன் இந்தியாவில் அநேக ஊழியங்களை ஆரம்பித்தார். அதில் ஒன்றுதான் சேலம் டேனிஷ்பேட்டையில் உள்ள பெத்தேல் ஊழியம்.


ஊழியக்களம் விரிவடைந்தது. உயர்ந்த வசீகரக் குரலுடைய ஈடித் இரட்டைப்பின்னலைக் கொண்டையாகக் கட்டி, இந்தியப்பெண்ணாய் சேலையை இடையில் சொருகி, அமெரிக்கப்பெண்ணாய் காரை ஓட்டிக்கொண்டு, ஆண்டவரின் செல்லமாய் அக்கார்டினை இசைத்துப் பாடி சிறியவர், பெரியவர், போதகர், அலுவலர்கள், அதிகாரிகள், ஆசிரியர்கள் என பலதரப்பட்டவர்களைக் கிறிஸ்துவுக்கு நேராய் வழி காட்டிக்கொண்டே இருந்தார்.

27 வருடங்கள் இந்தியாவில் வாழ்ந்த நாட்களில் ஐந்து முறை தாயகம் சென்று வந்துள்ள E. P. மார்கன் தனது V.B.S ஊழிய வளர்ச்சிக்காகவே அமெரிக்காவில் கடுமையாக உழைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. படிப்படியாக பெலவீனமடைந்த ஈடித் பெர்ல் மார்கன் 1997 ஜனவரி 20ஆம் தேதி தன் நித்திய வீட்டை அடைந்தார். அவரது மரணச்செய்தி, பத்திரிகையில் அவரது அடக்க ஆராதனை ஒழுங்குகளை வெளியிடும்போது “மலர்க் குவியலுக்குப் பதில் மெமோரியல்கள் செய்து, பால்ட்கிரீக் ஆலயத்தில் கொடுக்கவும். அதன் தொகை V.B.S ஊழியத்திற்காக பாளையங்கோட்டைக்கு அனுப்பப்படும்” என்ற செய்தியும் வெளியிடப்பட்டிருந்தது. மண்ணில் அடங்கும் வேளையிலும், விண்ணில் ஏறும் மனம் உன்னதர் பணியையே எட்டிப்பார்த்தது.

# துணிச்சல்காரன்
# ஒபதியா

MR. ISAAC KAMALESH






உச்சத்தில் இருக்கிறவர்கள் நாங்கள், உச்சத்திலிருந்து மக்களை ஆள நினைப்பவர்கள் அல்லது உச்சத்திலிருந்து அரசாளுபவர்களைத் தன் கைக்குள் வைத்து மக்களை மறைமுகமாக ஆளுவது எல்லாமே இன்று அல்ல 3000 ஆண்டுகளுக்கு முன் உலக அரசியலில் இருந்தது என்றால் ஆச்சரியமாயிருக்கிறதா!

ஏன் இப்படி ஒரு ஆரம்பவரிகள் என்று நீங்கள் கேட்கலாம். சரியான கேள்விதான். நாம் இந்த மாதம் இரண்டாம் வார செய்தியில் படிக்க இருக்கிற தீர்க்கதரிசியின் வீரிய களம் மற்றும் தீர்க்கதரிசியின் தைரியம், அஞ்சா நெஞ்சம், எதையும் எதிர்க்கொள்ளும் சக்தி இவற்றையெல்லாம் அறிந்துக் கொள்ளும்போது நீங்களே அதை உணருவீர்கள். சரி அப்படி இந்த தீர்க்கதரிசி யாரை எதிர்த்து தீர்க்கதரிசனம் உரைத்தார். எங்கு வாழும் மக்களை எதிர்த்து தைரியமாய் கடவுளின் வார்த்தையை அப்படியே உரைத்தார். அவர் பெயர் என்ன? என்று நீங்கள் கேட்பீர்களேயானால் ஆச்சரியமான பதில்தான். ஏனென்றால் பழைய ஏற்பாடு ஒரேயொரு அதிகாரம் கொண்ட ஒரே புத்தகம் ஒபதியா. அதன் அர்த்தம் கடவுளின் ஊழியக்காரன். அதன் தீர்க்கதரிசியும் அவரே. இதில் மொத்தம் 21 வசனங்கள் மட்டுமே உள்ளது. சொல்லப்பட்ட செய்தி இரு குடும்பங்களுக்கு மட்டுமே உண்டானது. இதில் ஒரு குடும்பம் உயர்தர அதாவது உங்களுக்கு புரியும்படி சொன்னால் “உச்சத்தில்” இருக்கிறோம் என்ற மமதைக் கொண்ட குடும்பம். அவர்கள் வசிக்கும் பகுதி உச்சம் தான், அதாவது மலை உச்சி. குடும்பப் பெயர் “ஏதோம்”, அவர்கள் குடியிருந்த மலை “ஏசா மலை”. இவர்கள் தகப்பன் “ஏசா”. அப்படியானால் மற்றொரு குடும்பப் பெயர் என்ன என்று கேட்டால், ஏசாவின் சகோதரர் “யாக்கோபு”. அவர்களின் வம்சாவளி யூதா ஜனங்கள் மற்றும் யோசேப்பு குடும்பம். ஏசா, யாக்கோபு இவர்கள் ஈசாக்கின் மகன்கள். இவர்கள் இருவரையும் ஆசீர்வதித்தது ஈசாக்கு தான். ஆசீர்வாதத்தைக் கொடுத்தது ஈசாக்கின் பயபக்திக்குரியவர் தான் என்பதில் சந்தேகமில்லை. இன்னும் சொல்லப்போனால் யாக்கோபை விட, ஏசாவின் சொத்து அதிகம். இதனால் ஏதோமியரின் எண்ணம் நாம் யூதாவை ஆளலாம் என்பதே.

சரி இப்படியே பேசிக்கொண்டே செல்லும் முன்பு தம்பி, தங்கை உன் வேதாகமத்தைக் கையில் எடுத்து விரைவாக ஒபதியாவில் உள்ள 21 வசனங்களை ஒரு முறை வாசித்து விட்டு, மீண்டும் இந்த செய்தியை வாசிக்க வா. 21 வசனத்தில் முதல் 16 வசனங்கள் ஏதோம் வம்சம் தேவனால் தாழ்த்தப்பட்டதைக் குறித்தும், மீதமுள்ள வசனங்கள் யாக்கோபின் வம்சம் தேவனால் மீட்கப்பட்டதைக் குறித்தும் உள்ளது.


1. The house of Edom Reduced by God.
2. The house of Jacob Restored by God.

இதில் ஏதோமின் நன்றிக் கெட்ட இருதயத்தையும் (Heart), துரோகம் கொண்ட கரத்தையும் (Hand) விவரிக்கிறார். இதைத் தொடர்ந்து ஏதோமிற்கான கண்டனத்தைச் சொல்லும்போது உன் வீழ்ச்சிக்கு காரணம் உன் நண்பர்களும், நண்பர்கள் போன்ற பகைவர்களுமே (Friends and Foes) என்கிறார். கடைசியாக உனக்கு வரும் வீழ்ச்சி மிகக் கடுமையானது. அது என்னவென்றால், நீ பணக்காரர்களாக பண்ணை வீட்டில் வாழும் காலம் முடிவுக்கு வருகிறது (Wealth Removed). நீ அறிவாளி என்று நினைத்துக்கொண்டு வாழ்கிறாயே, அது மழுங்கி போகும் காலம் வருகிறது (Wisdom Reduced). என் ஜனங்கள் வீழ்த்தப்படுத்தப்படும்போது (Jerusalem Fall) காணாததுபோல் இருந்தாயே, மேலும் என் ஜனங்களை ஆள திட்டம் தீட்டுகிறாயே, தீமை செய்பவர்களோடு கூட்டு சேர்கிறாயே இந்த அனைத்து தீமையும் உனக்கு விரோதமாக திரும்பும் (Wickedness Returned) என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று தைரியமாக அந்த பணக்கார வர்க்கத்தை எச்சரிக்கிறதைப் பார்க்கும்போது, தீர்க்கனின் தேவவைராக்கியம், ஊழிய வீரியம் புலப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு வாக்கியத்தை இங்கு பதிவுச் செய்கிறேன். “உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம் போக்கும்” எத்தனைக் கடுமையான வார்த்தைகள். அதே நேரத்தில் யாக்கோபின் வம்சத்தைச் சொல்லும்போது என் ஜனங்களை ஆளுவதோ, நியாயந்தீர்ப்பதோ என் வேலை. என் ஜனங்கள் தங்கள் சுதந்திரத்தை மீட்டெடுப்பதோ என் காரியம். இதில் உன்னோடு (ஏதோம்) சேர்ந்துகொண்ட சிறு கூட்டத்தையும் நான் நியாயந்தீர்ப்பேன் என்று சொல்லுகிறார். இதன் முடிவான வார்த்தை அத்தனை அழகானது, உண்மையானது, ஜெயத்தொனியானது. அதன் கடைசி மூன்று வார்த்தைகளைப் பதிவுச்செய்கிறேன்.

“அப்பொழுது ராஜ்யம் கர்த்தருடையதாயிருக்கும்” என்பதே தீர்க்கன் சொல்லும் செய்தி. பணத்தை வைத்து, செல்வாக்கை வைத்து என் ஜனங்களை ஆள நினைக்காதே. பெருமை, அகந்தை போன்றவற்றால் நீ ஜெயிக்க முடியாது என்றெல்லாம் சொல்லும்போது, தேவனின் நியாயத்தீர்ப்பு என்பது “நீ செய்தபடியே உனக்கும் செய்யப்படும்; உன் செய்கையின் பலன் உன் தலையின்மேல் திரும்பும்” என்று பதிவுச் செய்கிறார். இந்த புத்தகத்திலிருந்து நாம் அறிந்துக்கொள்ள வேண்டியது,

1. தேவன் நம் மனதில் மறைந்திருக்கும் பெருமையைக் காண்கிறார்.
2. தேவன் தமது உடன்படிக்கையின் ஜனங்களைப் பாதுகாக்கிறார்.
3. நாம் பிறரை எவ்வாறு நடத்துகிறோம் என்பதை நினைவில் கொள்கிறார்.
4. எந்த துரோகமும் கவனிக்கப்படாமல் போவதில்லை.

இப்பொழுது தீர்க்கன் இரு குடும்பத்தை வேறு பிரித்துக் காட்டும் வார்த்தையோடு இந்த செய்தியை முடிக்கலாம். யாக்கோபு அக்கினி, யோசேப்பு அக்கினி ஜுவாலை, ஏசாவோ வைக்கோல். இப்படி இன்று உன்னால் தேவனிடமிருந்து செய்தி பெற்றுச் சொல்ல முடியுமா. களத்தில் வீரியம் காண்போம்.



# அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள்!



## கூடூர் பணித்தளம்
## பாகல்கோட் மாவட்டம்
## கர்நாடகா மாநிலம்

**ஓர் அறிமுகம்:**

வட கர்நாடகாவின் மகாராஷ்டிரா மாநிலத்தை ஒட்டியுள்ள பாகல்கோட் மாவட்டத்திலுள்ள குங்குண்ட் என்ற தாலுகாவில் அமைந்துள்ள ஓர் பஞ்சாயத்து யூனியன் பகுதி கூடூர். அதனால் கன்னடம் மற்றும் கொன்கனி மொழி பேசுகிறார்கள்.

கூடூர் கிராமத்தில் மட்டும் 11,989 பேர் வாழ்கின்றனர். லிங்காயத்து, வால்மிகி, குர்பாரு, மடர் என்ற பல மக்கள் வாழ்ந்தாலும், இவர்களில் பெரும்பான்மையானோர் பஞ்சாரா மக்களே.

**பஞ்சாரா மக்கள்:**

இந்தியாவில் 8 கோடி பேர் வாழும் பஞ்சாரா மக்கள், கர்நாடகா மாநிலத்தில் மட்டும் சுமார் 27 லட்சம் பேர் வாழ்கின்றனர். வட கர்நாடகாவில் லம்பாடி என்றும் அழைக்கப்படுகின்றனர். "கோர் போலி" என்ற இந்தோ-ஆரிய மொழியைப் பேசுகின்றனர். கர்நாடகாவில் இவர்கள் பட்டியல் இனத்தவராகவும், ஆந்திராவில் பழங்குடியினராகவும், சில மாநிலங்களில் பிற்படுத்தப்பட்டவர்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**மத நம்பிக்கை:**

"சீத்தல பவானி" என்ற பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். விதைகளை மூங்கில் கூடைகளில் விதைத்து, நன்கு வளர்ந்தால் நல்ல சகுனம் என நம்புகின்றனர். பாலாஜி, ஜெகதம்மா போன்ற தெய்வங்களை வழிபடுகின்றனர். குரு நானக் மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளனர்.

**சமூக அமைப்பு:**

முந்தைய காலங்களில் இளம்பெண்கள் பட்டணம் செல்வது தடைச் செய்யப்பட்டிருந்தது. விபச்சாரம் கண்டுபிடிக்கப்பட்டால் உயிரோடு எரிக்கப்படுகின்றனர். "கோமர், சரி" போன்றவை பஞ்சாரா மக்களின் சிறப்பு நடனங்கள்.

**சாதகங்கள்:**

இப்பகுதியை ஒட்டியே குஸ்தகி, கஜேந்திர கடா போன்ற பணித்தளங்கள் உள்ளன. பஞ்சாரி மொழியில் முழு வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இயேசு திரைப்படம் போன்ற அநேக வீடியோ தயாரிக்கப்பட்டுள்ளது.

**ஜெபியுங்கள்:**

- இந்தியாவின் மிகப்பெரிய மக்கள் இனமான பஞ்சாரா மக்கள் மத்தியில் ஓர் அசைவு ஏற்பட...
- வடக்கு கர்நாடகாவில் ஊழியம் ஆரம்பிக்க திட்டமிடும் கூடூருக்கு செல்ல மிஷனெரிகள் எழும்ப...
- சகுனம் பார்க்கும் இவர்கள் சத்திய தேவனை அறிய ஜெபிப்போம்.





Mr. Suriya Kumar



# AMERICA
# அமெரிக்கா

அமெரிக்கா ஒரு பன்முகத்தன்மை கொண்ட நாடு, குடியேற்றம், புதுமை, இராணுவ வலிமை மற்றும் கிறிஸ்தவ பாரம்பரியத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவம் மிகப்பெரிய மதமாக இருந்தாலும், மதச்சார்பின்மை தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

| | |
|---|---|
| **தலைநகரம்:** | வாஷிங்டன், டிசி. |
| **நாணயம்:** | அமெரிக்க டாலர் (USD) |
| **அரசியல் அமைப்பு:** | கூட்டாட்சி ஜனாதிபதி குடியரசு |
| **ஜனாதிபதி (2026):** | டொனால்ட் டிரம்ப் |
| **மக்கள் தொகை:** | 334 மில்லியன் |

மதம், விளையாட்டு மற்றும் பன்முகத்தன்மை: சுமார் 63% அமெரிக்கர்கள் தங்களைக் கிறிஸ்தவர்களாக அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள், தோராயமாக 20% பேர் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் சுமார் 40% பேர் புராட்டஸ்டன்ட் மற்றும் சுவிசேஷ மரபுகளைச் சேர்ந்தவர்கள், புராட்டஸ்டன்ட் ஒரு வலுவான கலாச்சார சக்தியாகும். மற்ற நம்பிக்கைகள் மக்கள்தொகையில் சிறிய பகுதிகளைக் கொண்டுள்ளது. கால்பந்து, ஐஸ் ஹாக்கி, கூடைப்பந்து மற்றும் தடகளம் போன்ற விளையாட்டுகள் ஆழமான கலாச்சார முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன, இது போட்டி மற்றும் சமூகக் கட்டமைப்பிற்கான நாட்டின் ஆர்வத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த துடிப்பான மதம் மற்றும் விளையாட்டு நிலப்பரப்புடன் இணைந்து, அமெரிக்கா உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாகவும், உலகளவில் கலாச்சாரம், அரசியல் மற்றும் புதுமைகளை வடிவமைக்கும் ஒரு உலகளாவிய தலைவராகவும் நிற்கிறது.

**அமெரிக்காவிற்கான ஜெபக்குறிப்புகள்:**

**1. தேவாலயங்கள் & ஆன்மீக புதுப்பித்தல்:**

- திருச்சபைகளிடையே மறுமலர்ச்சிக்காகவும், சுவிசேஷப் பிரசங்கத்தின் மீதான ஆர்வத்தைப் புதுப்பிக்கவும் நாம் ஜெபிப்போம்.
- மத வேறுபாடுகளைக் கடந்து, ஒற்றுமைக்காக நாம் ஜெபிப்போம்.
- தேவாலயத்திற்கு வருகை குறைந்து வருவது, வளர்ந்து வரும் மதச்சார்பின்மை மற்றும் நாத்திகம், போன்ற ஆழமான ஆன்மீக மற்றும் கலாச்சார சவால்களை அமெரிக்கா எதிர்கொள்கிறது.
- மறுமலர்ச்சி, ஒற்றுமை மற்றும் நீதிக்காகவும், கிறிஸ்தவ இளைஞர்கள் மதச்சார்பற்ற அழுத்தங்களுக்கு மத்தியில் விசுவாசத்தில் உறுதியாக நிற்கவும், எதிர்காலத்திற்குரிய நம்பிக்கையை பெற்றுக்கொள்ளவும் நாம் ஜெபிப்போம்.

**2. அடுத்த தலைமுறையின் கலாச்சார செல்வாக்கு மற்றும் ஒழுக்கம்:**

- 17-24 வயதுடைய இளைஞர்களில் சுமார் 72% பேர் மனநல நெருக்கடியால் (பதட்டம், மனச்சோர்வு மற்றும் அதிக அளவிலான திரை நேர விகிதங்கள்) பாதிக்கப்பட்டுள்ளனர்.
- பள்ளிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- கிறிஸ்தவக் குடும்பங்கள் தங்கள் குழந்தைகளை வேதாகமக் கோட்பாடுகளுடன் வளர்க்கவும், இதனால் அவர்கள் ஊடகம், அரசியல், கல்வி மற்றும் வணிகத்தில் சாரமுள்ள உப்பு மற்றும் ஒளியைப் போல இருக்கும்படியாகவும் ஜெபிப்போம்.
- டிஜிட்டல் தளங்கள் மூலம் அடுத்த தலைமுறையைச் சென்றடைய ஜெபிப்போம்.
- LGBTQIA+ மற்றும் போதைப்பொருள் அடிமைக்கு எதிராக இளைஞர்கள் புரட்சியை உருவாக்க ஜெபிப்போம்.
- கடந்த ஆண்டில் 27.8%க்கும் அதிகமான இளம் பெண்கள் சட்டவிரோத உறவு காரணமாக கருக்கலைப்பு செய்துள்ளனர் என்பது அதிர்ச்சியளிக்கிறது. இந்த இளம் ஆத்துமாக்கள் கர்த்தரின் வசனத்தால் மாற்றப்பட வேண்டும் என்று மனதார ஜெபிப்போம்.

**3. உலகளாவிய தலைமைத்துவம் மற்றும் நீதி:**

- அமெரிக்கத் தலைவர்கள் உள்நாட்டு மற்றும் வெளியுறவுக் கொள்கைகளில் நீதி, பணிவு மற்றும் இரக்கத்துடன் செயல்பட ஜெபிப்போம்.
- உலகம் முழுவதும் அமைதியையும், மனித உரிமைகளையும் மேம்படுத்துவதற்கு தேசம் தனது செல்வாக்கைப் பயன்படுத்த ஜெபிப்போம்.
- அமெரிக்காவின் எல்லைகளில் வன்முறை மற்றும் தீவிரவாதத்திற்கு எதிரானப் பாதுகாப்புக்காக ஜெபிப்போம்.

மிக முக்கியமாக Charlie Kirkஇன் குடும்பத்தை வார்த்தைகளால் ஆறுதல்படுத்த முடியாது. இருப்பினும், அவர் துணிச்சலாக செய்த ஊழியத்தின் விளைவாக அமெரிக்காவில் பல இளைஞர்களை Turning Point USA என்ற அமைப்பின் மூலம் கிறிஸ்துவின் மந்தையில் இணைத்தார். அவரது குடும்பத்திற்காக ஜெபிப்போம். அவர் விட்டுச் சென்ற விசுவாசத்தைப் பின்பற்றுவோம். அவரது வாழ்க்கை, 2 தீமோத்தேயு 4:7, 8யை பிரதிபலிக்கிறது: "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்." என்ற வசனம் அவரது விடாமுயற்சி, விசுவாசம் மற்றும் கர்த்தர் வாக்களித்த நித்திய நம்பிக்கையை நமக்கு நினைவூட்டுகிறது.

**சிறப்பு ஜெபக்குறிப்புகள்:**

**கிறிஸ்துமஸ், புனித வெள்ளி மற்றும் ஈஸ்டர் ஞாயிறு ஆகியவை கிறிஸ்துவின் பிறப்பு, இறப்பு மற்றும் உயிர்த்தெழுதலாக நினைவுகூரப்படுவதில்லை.**

- அவர்கள் குட்டி முயல்கள், அலங்கரிக்கப்பட்ட ஈஸ்டர் முட்டைகள், ஈஸ்டர் மதிய உணவு, ஈஸ்டர் அணிவகுப்பு, ஈஸ்டர் கூடை பற்றி மட்டுமே பேசுகிறார்கள் - இவை அனைத்தும் கோடை பருவப் பெருக்குச் சடங்குகளைப் பற்றியது, அதற்கும் கிறிஸ்தவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை.
- கிறிஸ்துமஸ் என்பது சாண்டா கிளாஸைப் பற்றியது, கிறிஸ்துமஸ் மரம் வாங்குவது மற்றும் கிறிஸ்துமஸ் பாடல்களைப் பற்றியது - இவை அனைத்தும் விருந்து மற்றும் கொண்டாட்டத்தைப் பற்றியது.
- மரணத்தின் மீதான வெற்றி, இருளின் மீதான ஒளியின் வெற்றி, புதிய வாழ்க்கை, நம்பிக்கை மற்றும் மன்னிப்பு ஆகியவற்றின் வாக்குறுதியைக் குறிக்கும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு மற்றும் உயிர்த்தெழுதலை அவர்கள் நினைவில் வைத்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாம் ஜெபிப்போம்.



# பணித்தள திருச்சபை மூப்பர்களுக்கான ஜெபக்கரிசனைகள்

**"இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப்பிரியனும் மனுஷரால் அங்கிகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான்." ரோமர் 14:18**

ஆதித் திருச்சபையின் காலந்துவங்கி இயேசு கிறிஸ்துவின் சரீரமாகியதிருச்சபைவளர்ந்துவருவதில்சபைமூப்பர்களாகிய உதவிக்காரர்களுடைய பங்களிப்பு புறக்கணிக்க முடியாதது. வேதாகமத்தில் இவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் (1 தீமோ. 3:8-13) என்று நாம் வாசிக்கிறோம். நமது பணித்தள திருச்சபைகளில் சபை மூப்பர்கள் மிக சிறப்பான தேவ ஊழியத்தை நிறைவேற்றி வருகின்றார்கள். அவர்களுடைய பலவிதமான பணிகளுக்கு மத்தியிலும், தேவைகளுக்கு மத்தியிலும் தேவனுக்காக அவர்கள் தன்னலமின்றி செயல்பட்டு வருவதற்காக நாம் மனதார தேவனைத் துதித்து, அவர்கள் நல்வாழ்வுக்காக ஊக்கமாக ஜெபிப்போம்.

**ஜெபிக்க:**

- ✦ நமது இயக்கத்தின் பணித்தள திருச்சபைகளில் தேவன் எழுப்பித் தந்துள்ள ஆயிரக்கணக்கான சபை மூப்பர்களுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காக மற்றும் அவர்களது ஊழியங்களுக்காக தேவனைத் துதிப்போம்.
- ✦ சபை மூப்பர்கள் ஒவ்வொருவருக்கும் தேவன்தாமே நல்ல ஆரோக்கியத்தையும், பாதுகாப்பையும் தரவும், அவர்களது வாழ்வாதார தேவைகள் தடையின்றி சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.
- ✦ சபை மூப்பர்கள் ஒவ்வொருவரும் வேததியானம், ஜெபம் மற்றும் சாட்சியின் வாழ்வை காத்துக்கொள்வதில் ஜாக்கிரதையாயிருக்க ஜெபிப்போம்.
- ✦ சபையின் ஆராதனை ஒழுங்குகள், விசுவாசிகள் பராமரிப்பு, சுற்றுப்புற ஊழியம் என அனைத்து ஊழியங்களையும் ஒழுங்கும், கிரமமுமாக நிறைவேற்ற தேவ ஒத்தாசை மூப்பர்களுக்கு அருளப்பட ஜெபிப்போம்.
- ✦ சபை மூப்பர்களுக்கென்று நடத்தப்படும் பயிற்சி கூடுகைகள், சிறப்பு ஆவிக்குரிய குடும்பக் கூடுகைகள் மற்றும் உபவாச ஜெபங்களில் மூப்பர்கள் தவறாது கலந்துக்கொண்டு பயனடைய ஜெபிப்போம்.
- ✦ சபை மூப்பர்களுடைய பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர் ஊழியத்தில் மூப்பருக்கு உதவியாக இருக்கவும், சாட்சியாக ஜீவிக்கவும் ஜெபிப்போம்.
- ✦ சபையில் நடைபெறும் ஆராதனைகள் மற்றும் ஜெபங்களை எழுச்சியோடு நடத்துவதற்கு வேண்டிய ஆவிக்குரிய கிருபை வரங்களைத் தேவன் அவர்களுக்கு அளவில்லாமல் தர ஜெபிப்போம்.
- ✦ கல்வியறிவற்ற மூப்பர்களுக்கென நடத்தப்படும் முதியோர் கல்வி திட்டத்தின் மூலம் அனைவரும் வேதத்தை வாசிக்கும் பாக்கியத்தைப் பெற ஜெபிப்போம்.
- ✦ சபை மூப்பர்களுக்கு எதிராக சில மாநிலங்களில் போடப்பட்டுள்ள பொய் வழக்குகள் ரத்து செய்யப்படவும், விடுதலையோடு அவர்கள் ஊழியம் செய்யும் கிருபையைத் தேவன் தரவும் ஜெபிப்போம்.
- ✦ சபையை வழிநடத்துவதில் சபை மூப்பருக்கு விசுவாசிகள் ஒத்துழைப்பு தரவும், ஏக சிந்தையோடு ஒருமித்து திருப்பணிகளை நிறைவேற்றி தேவ நாமத்தை மகிமைப்படுத்தவும் ஜெபிப்போம்.
- ✦ ஒவ்வொரு சபை மூப்பரும் தங்கள் சபையில் ஞாயிறு ஆராதனையுடன் புதன்கிழமை உபவாச ஜெபம், வீட்டு ஜெபக்கூட்டம், வேதாகம குழு பயிற்சி மற்றும் சுற்றுப்புற சுவிசேஷ ஊழியத்தையும் ஜெபத்தோடு நிறைவேற்ற தேவன் உதவிட ஜெபிப்போம்.
- ✦ புதிய ஆராதனைக் குழுக்கள் மற்றும் மூப்பர்களற்ற சபைகளில் இவ்வாண்டு தேவன்தாமே அர்ப்பணமுள்ள, சாட்சியுள்ள மற்றும் வாஞ்சையுள்ள புதிய மூப்பர்களை எழுப்பித்தர ஜெபிப்போம்
- ✦ வாழ்வாதாரம் தேடி மூப்பர்கள் வெளியூர்களுக்குச் செல்வதால் ஊழியம் தடைபடாதபடிக்கு, உள்ளூரிலேயே அவர்களுக்கு நல்ல வேலைகள் கிடைக்க மன்றாடி ஜெபிப்போம்.

# போதைப் பொருள் பயன்பாட்டுக் கோளாறு

## Substance Use Disorder - SUD



### என்ன?

போதைப் பொருள் பயன்பாட்டு கோளாறு (SUD) என்பது ஒரு நபர் மதுபானம், போதைப் பொருட்கள் அல்லது சில மருந்துகளுக்கு அடிமையாகி, அது உடல் நலம், கல்வி, உறவுகள் அல்லது தினசரி வாழ்க்கையில் பாதிப்புகளை ஏற்படுத்தினாலும், தொடர்ந்து பயன்படுத்துவதைக் குறிக்கும்.

பொதுவாக அடிமையாக்கும் பொருட்கள்:

- ✦ மதுபானம் (Alcohol)
- ✦ புகையிலை / நிகோட்டின் (Tobacco / Nicotine)
- ✦ கஞ்சா (Cannabis)
- ✦ சட்டவிரோத போதைப் பொருட்கள் (கோகைன், ஹெராயின் போன்றவை)
- ✦ புகைப்பிடித்தல் (Smoking)
- ✦ மருந்துகளைத் தவறாக பயன்படுத்துதல் (வலி நிவாரணிகள், தூக்க மாத்திரைகள், மயக்க மருந்துகள்)
- ✦ இன்ஹேலண்ட் (Inhalant) தவறான பயன்பாடு (பசை, பெயிண்ட் தின்னர் போன்றவற்றை நுகர்ந்து போதை உணர்வடைதல்)

### ஏன்?

- ✦ அந்தப் பொருளைப் பயன்படுத்த வேண்டும் என்ற தீவிர ஆசை (Craving).
- ✦ எவ்வளவு / எத்தனை முறை பயன்படுத்துவது என்பதில் கட்டுப்பாடு இல்லாமை.
- ✦ உடல்நல பாதிப்பை ஏற்படுத்தினாலும், தொடர்ந்து பயன்படுத்துதல்.
- ✦ அதிக உணர்வை உணர அதிக அளவு தேவைப்படுதல் (tolerance)
- ✦ இவற்றை நிறுத்தும்போது உடல் அல்லது மன அசௌகரியம் (withdrawal)

### எப்படி ஏற்படுகிறது?

- ✦ மன அழுத்தம் அல்லது உணர்ச்சி ரீதியான போராட்டங்கள்
- ✦ நண்பர்களின் அழுத்தம் (peer pressure)
- ✦ புதிய பொருள்களை உபயோகித்துப் பார்க்கும் ஆர்வம்
- ✦ குடும்பத்தின் போதை பழக்க வரலாறு
- ✦ மனநல பிரச்சினைகள் (மனச்சோர்வு, கவலை)

### சிகிச்சை பெற முடியுமா?

ஆம், குணமடைவது சாத்தியமே. ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து திருத்துவது மிகவும் முக்கியம். நம்பகமான பெரியவர்கள், ஆலோசகர்கள், மருத்துவர்கள் அல்லது ஆதரவு குழுக்களுடன் பேசுவது குணமடைவதற்கு வழிவகுக்கும்.

### புள்ளிவிவரங்கள் (Statistics):

1. இந்தியாவில் 10-17 வயதுடைய சுமார் 1.5 கோடி பிள்ளைகள் மதுபானம், இன்ஹேலண்ட் அல்லது ஓபியாய்டு போன்ற போதைப் பொருட்களைப் பயன்படுத்தியுள்ளனர்.
2. 10 இந்திய நகரங்களில் 5,920 மாணவர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில், சராசரியாக 12.9 வயதில் போதைப்பொருள் பழக்கம் ஏற்படுகிறது. 15.1% பேர் வாழ்நாள் முழுவதும் போதைப்பொருள் பயன்படுத்தியுள்ளனர் (புகையிலை 4%, மதுபானம் 3.8%, ஓபியாய்டு 2.8%).
3. முதல் முறையாக போதைப்பொருள் பயன்படுத்தும் சராசரி வயது 12.9.
4. பள்ளி மாணவர்களில் 7 பேரில் 1 பேர் போதைப் பொருள் மற்றும் மதுபானத்தை முயற்சி செய்துள்ளனர்.

### ஜெபக் குறிப்புகள்:

1. போதைப்பொருளுக்கு அடிமையாகாமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள
2. இளைஞர்களின் மனதைப் புதுப்பித்து, தீமையான விருப்பங்கள் அகற்றப்பட
3. சோதனைகளை எதிர்த்து நின்று, சரியானதை தேர்ந்தெடுக்கும் தெளிந்த புத்தியைப் பெற்றுக்கொள்ள
4. அடிமைத்தன்மையால் ஏற்பட்ட பாதிப்புகள் குணமாக
5. அவர்கள் நம்பிக்கை, நோக்கம் மற்றும் புதிய வாழ்வைப் பெற்றுக்கொள்ள
6. நல்ல நண்பர்கள், வழிகாட்டிகள், குடும்பம் மூலம் சரியான பாதையில் நடத்தப்பட ஜெபிப்போம்.

**விடியலுக்குக் காத்திருந்த மக்களுக்கு விடியலைக் கொடுத்த அருட்பணியாளர்**

# ஓர் இனிய உரையாடல்



**அருட்பணியாளரின் அறிமுகம்:** என் பெயர் ஜான்சன் பர்னபாஸ். என் பெற்றோர் மிகுந்த தேவபக்தியுள்ளவர்கள் ஆனதால் என்னை ஞாயிறு பள்ளிக்கு அனுப்புவது, பைபிள் வாசிக்க மற்றும் ஜெபிக்க வைப்பது என்று தேவபக்திக்குள்ளாகவே வளர்த்தனர்.

**கேள்வி: நீங்கள் எப்பொழுது முழு நேரப்பணிக்கு உங்களை அர்ப்பணித்தீர்கள்?**

**அருட்பணியாளர் பதில்:** என்னுடைய கல்லூரி நாட்களில் "யூத் ஃபார் கிரைஸ்ட்" (Youth for Christ) என்ற கூட்டத்தின் மூலம் கர்த்தரை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். இது இறுதியில் என் வாழ்க்கையை மிஷனெரிப்பணிக்காக அர்ப்பணிக்க வழிவகுத்தது.

**கேள்வி: உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனை எப்பொழுது ஏற்பட்டது?**

**அருட்பணியாளர் பதில்:** 1974ஆம் ஆண்டில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு (FMPB) இயக்கத்தில் இணைந்தேன். என் ஒரு வருட பயிற்சிக்கு பின், அருட்திரு. இஸ்ரேல் தேவதாஸ் அவர்களுடன் இணைந்து தெற்கு குஜராத்தின் குக்னா பழங்குடியினரிடையே ஊழியம் செய்ய பணியமர்த்தப்பட்டேன். கர்த்தர் அற்புதமாக எனக்கு குக்னா மொழியைக் கற்கவும், குக்னா மக்களிடையே பணியாற்றவும் உதவினார். இது என் வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைந்தது.

**கேள்வி: ஊழியத்தில் நீங்கள் சந்தித்த சவால்கள் என்ன?**

**அருட்பணியாளர் பதில்:** இதில் உடல்ரீதியான சவால்கள் மிகப் பெரியவை. மின்சாரம் இல்லாத மண் வீடுகளில் வாழ வேண்டியிருந்தது. தொலைதூர கிராமங்களை அடைய புலிகள், சிறுத்தைகள் மற்றும் நாகப்பாம்புகள் நிறைந்த காட்டின் வழியே 16 முதல் 20 கிலோமீட்டர் வரை செல்ல மாட்டு வண்டிகளை மட்டுமே நம்பவேண்டியிருந்தது. இங்குள்ள மக்கள் அடிக்கடி மலேரியா, காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற நோய்களோடு போராடினர்.

**கேள்வி: ஊழியத்தில் குக்னா மக்களிடையே கண்ட அற்புதங்கள் என்ன?**

**அருட்பணியாளர் பதில்:** கிராமத்து மந்திரவாதிகள் அடிக்கடி மிஷனரிகளுக்கு சவால் விட்டனர், ஆனால் கொடிய நாகப்பாம்பு கடி மற்றும் போலியோவிலிருந்து விசுவாசிகள் அற்புதமாக குணமடைந்ததையும், பத்து ஆண்டுகளாக குழந்தை இல்லாத பெண்கள் கருத்தரித்ததையும் கண்டு அவர்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். மேலும் 1984ஆம் ஆண்டு போபி (Bopi) என்ற கிராமத்தின் தலைவர் அருட்திரு. பர்னபாஸின் பிரசங்கத்தை இடைமறித்து, இன்றும் அற்புதங்களைச் செய்யும் வல்லமை இயேசுவுக்கு இருக்கிறதா என்று கேள்வி எழுப்பினார். எட்டு வருடங்களாகப் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த உள்ளூர் மந்திரவாதியின் மகளான தேவ்லி பேன் (Devli Ben) என்பவரை மூங்கில் ஸ்ட்ரெச்சரில் தூக்கிக்கொண்டு வந்தனர். விசுவாசிகள் தீவிரமாக ஜெபித்தபோது, தேவ்லி பேன் "அல்லேலூயா" என்று சத்தமிட்டபடி எழுந்து நின்றாள்.

**கேள்வி: ஊழியத்தால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட விளைவுகள் என்ன?**

**அருட்பணியாளர் பதில்:** FMPB பெத்தேல் விடுதிகளின் (Bethel hostels) மூலம், குக்னா பழங்குடியைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் கல்வியறிவு பெற்றனர். அந்த ஆரம்பகால, கடினமான ஆண்டுகளில் விதைக்கப்பட்ட ஆன்மீக விதைகள் நம்பமுடியாத அறுவடையைக் கொடுத்துள்ளன. 250க்கும் மேற்பட்ட இளம்பெண்கள் நர்சிங் படிப்புகளை முடித்து மருத்துவமனைகளில் வேலை செய்கிறார்கள். 50க்கும் மேற்பட்ட நபர்கள் மருத்துவர்களாகவும், ஆசிரியர்களாகவும் பணிபுரிகின்றனர். 150க்கும் மேற்பட்ட வாலிபர்கள் வட இந்திய திருச்சபை (CNI) வேதாகமக் கல்லூரியில் பட்டம் பெற்று, ஒரு காலத்தில் சுவிசேஷம் முற்றிலும் அறியப்படாத அதே கிராமங்களில் பிரசங்கிக்க CNI பிஷப்பால் பாஸ்டர்களாக (போதகர்களாக) அபிஷேகம் செய்யப்பட்டுள்ளனர்.இயேசு கிறிஸ்துவின் பிரகாசமான, வாழ்க்கையை மாற்றும் அன்பிற்கு எந்தக் காடும் மிகவும் அடர்த்தியானது அல்ல, எந்த மொழியும் மிகவும் கடினமானது அல்ல, எந்த இதயமும் மிகவும் கடினமானது அல்ல என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

**அன்பு வாலிபப் பிள்ளைகளே! குக்னா மக்களைப் போன்று கர்த்தரை அறியாத ஜனங்கள் இன்னும் அநேகருண்டு. இந்த அழிவிலிருந்து மீட்டெடுக்க நீங்கள் முன்வருவீர்களா? நாட்கள் பொல்லாதவைகளானதால் நீங்கள் காலத்தைப் பிரயோஜனபடுத்திக் கொள்ளுங்கள்.**

**ஜெபிக்க :**

- குக்னா மக்கள் அனைவரும் உண்மையான தேவனைக் கண்டுக்கொள்ள...
- இவர்களிடையே காணப்படும் மலேரியா, காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற வியாதிகள் மறைய...
- சுவிசேஷம் அறிவிப்பதில் வரும் தடைகள் நீங்கி, சந்திக்கப்படாத கிராமங்கள் சந்திக்கப்பட...
- விசுவாசிகள் தொடந்து ஆலயத்திற்கு வர...
- அநேக வாலிபர்கள் முழு நேர ஊழியர்களாக எழும்பிவர ஜெபிப்போம்.

PRAYER POINTS - YOUTH RELATIONSHIPS

Mrs. Jeba Saral

# Mafia Mania



நம் வாழ்க்கையின் இன்பமான காலக்கட்டங்களில் முதலில் நிற்பது நம் பள்ளி பருவமும், சிலருக்கு College daysசும் தான். ஆனால் வருத்தத்திற்குரியது என்னவென்றால், இந்த Generationsக்கு அது தலைகீழாக மாறிக்கொண்டு வருகிறது. Groupism, Casteism என்று Schoolகளில் பரவியிருக்கிறது. இன்றைக்கும் பல கிராமங்களில், ஜாதியின் பெயரில் மாணவர்களிடையே மோதல் ஏற்படுகிறது. அவற்றுள் சமீபத்தில் நாங்குநேரி, வள்ளியூர் போன்ற பகுதிகளில் மாணவர்களிடையே ஜாதிக் கலவரம் ஏற்பட்டு, உயிருக்கு ஆபத்தான முறையில் மூன்று மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். டெல்லி போன்ற இடங்களில் School, Collegeகளில் Gangster Groupஇல் சேர, தனியாக சேர்க்கை நடத்தப்பட்டு, பயிற்சியும் அளிக்கப்படுகிறது. சிறுவர்கள் கொலைகளில் ஈடுபடுத்தப்படும்போது, தண்டனை அவர்களுக்கு பெரியவர்களைவிட குறைவு என்பதால் இதனைப் பயன்படுத்தி, சிறுவயதிலேயே நஞ்சைக் கலக்கின்றனர். காதல் விவகாரத்தில் கல்லூரி மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டு, மாணவன் பலியான சம்பவம் 2025இல் சென்னையைப் புரட்டிபோட்டது. கோபம், எரிச்சல், அகங்காரம் போன்றவற்றால் இன்று பல மாணவர்களின் வாழ்க்கை ஜெயிலில் கழிக்கப்படுகிறது. இவர்களின் மனந்திரும்புதலுக்காகவும், Groupism ஏற்படாமல் இருக்கவும் திறப்பில் நிற்க நீ தயாரா? இம்மாதம் இவைகளுக்காக பாரங்கொண்டவர்களாய் நம் முழங்கால்களை முடக்குவோம்.

## ஜெபக்குறிப்புகள்:

- BBC அறிக்கையின்படி "Nakkal Mafia" என்ற பெயரில் UPஇல் உள்ள பல பள்ளிகளில் பள்ளியின் முதல்வர், ஆசிரியர்கள் போன்றோர் மாணவர்களைத் தேர்வு செய்து, அரசு தேர்வுகளில் ஏமாற்று வேலைகளில் ஈடுபடுத்தல் போன்ற செயல்கள் நிறுத்தப்பட ஜெபிப்போம்.
- அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஜாதி பிரச்சனைகளுக்கு மாணவர்கள் ஒருநாளும் காரணமாகிவிடாதபடிக்கு ஜெபிப்போம்.
- மூர்க்கம், கோபம், எரிச்சல் போன்றவை பள்ளி, கல்லூரியிலுள்ள மாணவர்களிடையே இல்லாமல் போகும்படி தேவன் அவற்றை அப்புறப்படுத்த ஜெபிப்போம்.
- மாணவர்களைப் போதைப்பொருட்களுக்கு அடிமையாக்கிவிட்டால், அவர்கள் வியாபாரம் பல்லாண்டு எவ்வித தடையுமின்றி அமோகமாக நடக்கும் என்ற இடைத்தரகர்களின் யோசனை அவமாக்கப்பட ஜெபிப்போம்.
- பள்ளி மாணவர்களைப் போதைப்பொருள் விற்க மற்றும் கையாடல்பண்ணப் பயன்படுத்தும் "Drug Mafia"க்கள் சிதறடிக்கப்பட ஜெபிப்போம்.
- கல்லூரிகளில் மாணவிகளைப் பாலியல் தொழிலுக்குத் தள்ளும் சக மாணவிகள், ஆசிரியர்களைக் கொண்ட "விபச்சாரக் கும்பல்" அழிக்கப்பட திறப்பில் நின்று ஜெபிப்போம்.
- பள்ளி, கல்லூரி ஆசிரியர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டும் மாணவர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.
- ஒருதலைக் காதல், கோஷ்டி மோதல், ஜாதி பிரச்சனைகளில் Mafiaக்களை வைத்து தாக்கி அவர்களுக்கு உயிர்ப் பயத்தை ஏற்படுத்தும் மாணவர்களைத் தேவன் தடுத்து, நிறுத்தி இரட்சிக்க ஜெபிப்போம்.

# உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா?

(வேதாகம மொழி பெயர்ப்புப் பணி)

## சௌத்ரி மொழி

இந்த மாதம் சௌத்ரி மக்களைக் குறித்து உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

**சௌத்ரி மக்களின் தோற்றம்:**

குஜராத் மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை 6,04,39,692 ஆகும். அதில் பழங்குடியினர் (Tribal population) 89,17,174 பேர். இது மாநில மக்கள் தொகையின் 14.75% ஆகும். 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி, குஜராத் மாநிலத்திலுள்ள சௌத்ரி பழங்குடியினர் 3.03 லட்சமாக இருந்தனர். இது மாநிலத்தின் திட்டமிடப்பட்ட பழங்குடியினர் (Scheduled Tribe) மக்கள் தொகையில் 3.40% ஆகும். இவர்கள் சௌத்ரி மொழி வழக்கில் (Chaudhari dialect) பேசுகின்றனர். மேலும், இவர்கள் குஜராத்தி மொழியையும் (Gujarati) ஒரு அளவு வரை பேசத் தெரிந்தவர்கள்.

**சௌத்ரி மக்களிடையே FMPB ஊழியம் (FMPB Ministry):**

1974ஆம் ஆண்டு FMPB இரண்டு திருமணம் ஆகாத மிஷனெரிகளை வ்யாரா பகுதிக்கு அனுப்பியது. அங்கு காமிட் (Gamit) மக்களிடையே ஊழியம் தொடங்கப்பட்டது. காமிட் மக்கள் சுவிசேஷத்திற்கு நல்ல பதில் அளித்தனர். சில வழிபாட்டு குழுக்கள் உருவானது. 1982 வரை எதிர்ப்பு இருந்ததால் சௌத்ரி மக்களிடையே கிறிஸ்தவர்கள் மிகக் குறைவாக இருந்தனர். பின்னர் அவர்கள் சுவிசேஷத்தை ஏற்கத் தொடங்கினர். அதனால் உனை (Unai) பகுதியில் புதிய மிஷன் தொடங்கப்பட்டது. 1982இல் பதம்துங்க்ரி (Padamdungri) என்ற இடத்தில் முதல் ஞானஸ்நானம் நடந்தது.

**இன்றைய ஊழியத்தில் வேதாகம மொழிபெயர்ப்பு ஊழியம் (Bible Translation):**

1981இல், FMPB சௌத்ரி மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்க்க தீர்மானித்தது. மொழி பெயர்ப்பாளர்கள்: Rev.Christopher Thomas & Mrs. Vasantha Vembu. இவர்கள் வேட்சி (Vedchi) என்ற கிராமத்தில் குடியேறி சௌத்ரி மொழியைக் கற்றுக்கொண்டனர். அவர்கள் புதிய ஏற்பாட்டை (New Testament) மொழிபெயர்த்தனர். அது 2008 ஜனவரி மாதத்தில் வெளியிடப்பட்டது. பழைய ஏற்பாடு (Old Testament) மொழிபெயர்ப்பு 2012 ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்டது. இப்போது முழு மொழிபெயர்ப்பும் முடிந்து இறுதி திருத்தம் நடைபெற்று வருகிறது. 2015இல் "Jesus Film" சௌத்ரி மொழியில் டப் செய்யப்பட்டது. 2023இல் புதிய ஏற்பாட்டின் ஆடியோ பதிப்பு தயாரிக்கப்பட்டது. 350க்கும் மேற்பட்ட ஆடியோ NTகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

**தேவனைத் துதிப்போம்:**

★ 10,000க்கும் மேற்பட்ட சௌத்ரி விசுவாசிகள் இயேசுவை ஆராதிப்பதற்காக
★ பல மிஷன் இயக்கங்கள் மூலம் நிறுவப்பட்ட சபைகளுக்காக
★ புதிய ஏற்பாடு அச்சிட்டு விநியோகிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிப்போம்:**

★ இந்தப் பகுதியில் பரவியுள்ள 3.03 லட்சம் சௌத்ரி மக்களின் இரட்சிப்புக்காக
★ தெய்வங்களின் மீது உள்ள நம்பிக்கையில் நிலை நிற்கும்படியாக
★ சௌத்ரி விசுவாசிகள் தங்கள் மக்களிடையே சுவிசேஷ ஆர்வம் பெற
★ படித்த இளம் பெண்களுக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணைகள் கிடைக்க.
★ விசுவாசிகள் வேதாகமத்தைத் தினமும் வாசித்து விசுவாசத்தில் பலப்பட
★ சௌத்ரி மொழியில் பழைய ஏற்பாடு மொழிபெயர்ப்பு முடிவடைய
★ Bible Society of India மற்றும் FMPB இடையே ஒப்பந்தம் கையெழுத்தாக ஜெபிப்போம்.

தம்பி, தங்கைகளே நாம் துரிதமான வாழ்க்கை ஓட்டத்தை ஒரு நிமிடம் நிறுத்திவிட்டு... நான் சரியான பாதையில், தேவனுடைய சித்தப்படி ஓடுகிறேனா? என்று சற்று சிந்தித்துப் பார்த்து வாழுவோம். உங்கள் தேவன் எங்கள் மொழியிலும் பேசுவாரா? என்ற ஏக்கக் குரல் இன்றும் தொனித்து கொண்டுதான் உள்ளது.

**கர்த்தரின் சத்தம் கேட்டு சித்தம் செய்ய நம்மை முழுமையாய் அர்ப்பணிப்போமா?**

PRAYER POINTS - FMPB - மொழி களத்தில் வேதம்

Mrs. Jane





# VIRAL NEWS பரபரக்கும் களத்தில் உன் விண்ணப்பம்...





## PRANK GOES WRONG

- ஜார்ஜியாவில் ஒரு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர், தனது மாணவர்கள் கழிவறைக் காகிதத்தைக் கொண்டு செய்த ஒரு குறும்பு மிகவும் தவறாகப் போனதால், தன் வீட்டிற்கு வெளியே எதிர்பாராதவிதமாக வாகனம் மோதி உயிரிழந்தார்.
- வாழ்வுக்கும், மரணத்திற்கும் இடையிலான இதுபோன்ற காரியங்களில் ஈடுபடும் வாலிபர்களுக்கு கர்த்தர் ஞானத்தைக் கொடுக்கவும், தங்கள் அன்புக்குரியவரை இழந்துவாடும் குடும்பத்திற்காகவும் ஜெபிப்போம்.

## AFGHANISTAN ACCUSES PAKISTAN

- காபூலில் உள்ள மருத்துவமனை மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்திய நிலையில், இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 400ஐ எட்டியுள்ளதாக ஆப்கானிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.
- நாடுகள் தங்களுக்குள் அமைதியை நிலைநாட்டவும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்காகவும் ஜெபிப்போம்.









## ELECTION'26

- தமிழகத்தில் ஏப்ரல் 23 அன்று ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெறும் என்றும், வாக்கு எண்ணிக்கை மே 4 அன்று நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
- சேவை மனப்பான்மை கொண்ட, நீதியை நிலைநாட்டும் மற்றும் தமிழக மக்களை வளமான எதிர்காலத்திற்காக ஒன்றிணைக்கும் தலைவர்களைக் கர்த்தர் எழுப்பி தரும்படி ஜெபிப்போம்.




## SRI LANKA - OIL CRISIS

- மத்திய கிழக்கு மோதல் அப்பகுதியில் எரிசக்தி விநியோகத்தைக் கடுமையாகப் பாதித்து வருவதால், குறைந்துவரும் தனது எரிபொருள் மற்றும் எரிவாயு இருப்புகளைப் பாதுகாக்கும் பொருட்டு, இலங்கை நான்கு நாள் வேலை நேரத்தைக் கொண்ட ஒரு குறுகிய வார முறையை அறிமுகப்படுத்துகிறது.
- போர் முடிவடையவும், அதன் விளைவுகளால் பாதிக்கப்பட்ட உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான குடிமக்களின் வாழ்க்கை மீட்கப்படவும் ஜெபிப்போம்.








## MELODY OR MYSTERY?

- ஜெஃப்ரி எப்ஸ்டீனின் (Jeffrey Epstein's) குற்றங்களுடன் பாப் இசை வீடியோக்களைத் தொடர்புபடுத்தும் சமூக ஊடகங்கள், மன அதிர்ச்சியை ஒரு பரவலான 'மீம்' ஆக மாற்றியுள்ளன. இந்த டிஜிட்டல் நிகழ்வு, பாதுகாப்பு இல்லாமல் வெளிப்படையான உள்ளடக்கத்தை எதிர்கொள்ளும் இளம் வாலிபர்களையும், இளைஞர்களையும் பாதித்துள்ளது. இது சிதைந்த சமூகக் கற்றலுக்கு வழிவகுக்கிறது.
- சமூக ஊடகங்களில் உலாவிக் கொண்டிருக்கும் இளைஞர்களின் இதயங்களையும், மனங்களையும் கர்த்தர் பாதுகாத்துக்கொள்ள ஜெபிப்போம். ஊடகங்களின் வார்த்தைகளால் அல்ல, கர்த்தருடைய வார்த்தையில் வளர ஜெபிப்போம்.

# வைராக்கியத்திற்கு ஓர் செயல்வடிவம்

MR. ISRAEL NATHANIEL EDWARD



கடந்த மாதம், பவுல் எலிமா என்பவரைச் சந்தித்த நிகழ்விலிருந்து, தீமையைச் சரியான வழியில் எதிர்கொள்வதைப் பற்றி கற்றுக்கொண்டோம். பவுல் புற இனத்தாருக்கு அப்போஸ்தலனாக அழைக்கப்பட்டார் என்பது நமக்குத் தெரியும் (அப் 9:15). இந்த மாதம், பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவில் பவுலுக்கும், பர்னபாவுக்கும் நடந்த சம்பவங்களிலிருந்து பாடங்களைக் கற்கப் போகிறோம். புற இனத்தாரிடையே ஊழியம் செய்வதற்கான ஒரு செயல் வடிவத்தை தேவன் பவுலுக்குக்கொடுத்தார். தேவன் தமது வைராக்கியத்தைக் கொடுக்கும்போது, அதை எவ்வாறு செயல்படுத்துவது என்றும் நமக்குக் கற்றுத்தருகிறார்.

கடந்த மாதம், சீப்புரு தீவை விட்டுப் புறப்பட்ட உடனே, பவுலும் பர்னபாவும் கடற்கரையோரத்திலுள்ள மற்ற நகரங்களைத் தவிர்த்துவிட்டு, நேரடியாக பிரதான தேசத்திலுள்ள பிசீதியாவின் அந்தியோகியாவுக்குப் பயணம் செய்ததைப் பார்த்தோம் (அப். 13:13-14). செர்கியு பவுல் என்பவரிடமிருந்து பிசீதியாவின் அந்தியோகியாவிலுள்ள உயர்குடும்பங்களுக்குப் பரிந்துரைக் கடிதங்கள் கிடைத்ததே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் யோசித்தோம். ஆயினும், அது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்ததாலேயே தேவன் அவர்களை அங்கே அழைத்துச் சென்றார்.

பிசீதியாவிலுள்ள அந்தியோகியா, ஒரு ரோமக் குடியேற்றப் பகுதியாகவும், இராணுவக் கோட்டையாகவும் இருந்தது. அதை ரோமப் பேரரசின் மற்ற பகுதிகளுடன் இணைக்கும் முக்கிய சாலையான வையா செபாஸ்தே (Via Sebaste) பாதையில் அது அமைந்திருந்தது. இது, கலாத்தியா பிராந்தியம் முழுவதும் சுவிசேஷம் பரவுவதற்கு ஏற்ற ஒரு மைய இடமாக அதை மாற்றியது. ரோமர்கள், கிரேக்கர்கள் மற்றும் கணிசமான யூத சமூகம் என பலதரப்பட்ட மக்கள் அங்கு வாழ்ந்ததால், பவுல் சென்றடையத் தேடிய உலகின் ஒரு சிறு வடிவமாக (நுண்ணுலகமாக) அந்த நகரம் விளங்கியது.

தமது வழக்கத்தின்படி, பவுல் முதலில் யூத ஜெப ஆலயத்திற்குச் சென்றார். பேச அழைக்கப்பட்டபோது, யூதர்களுக்கும், யூத மதத்திற்கு மாறிய புற இனத்தவர்களுக்கும் ஒரு சிறந்த பிரசங்கத்தை நிகழ்த்தினார். எகிப்திலிருந்து விடுவித்தது முதல் தாவீது ராஜா வரை, இஸ்ரவேலருடைய வாழ்வில் தேவன் செய்த அரிய காரியங்களை முதலில் விளக்கினார். பின்னர், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தாவீதின் குமாரன் இயேசுவே என்றும், சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம், இயேசு மனுக்குலத்திற்கு வாக்களிக்கப்பட்ட இரட்சகரானார் என்றும் விளக்கினார். இயேசுவை விசுவாசிப்பவர்கள், பாவமன்னிப்பைப் பெறுவதன் மூலம் மரண ஆக்கினையிலிருந்து இலவசமாக விடுவிக்கப்படுவார்கள் என்றும், இந்த கிருபையின் செய்தியைப் புறக்கணிக்க வேண்டாம் என்றும் எச்சரித்து தமது பிரசங்கத்தை முடித்தார் (அப். 13:16-41).

அநேக யூதர்களும், யூத மதத்தைச் சேர்ந்தவர்களும் இந்த கிருபையின் செய்தியை ஏற்றுக்கொண்டார்கள் (அப். 13:43). எனினும், அந்தியோகியாவிலுள்ள யூத சமூகம் முழுவதும் சுவிசேஷத்தில் ஆர்வம் காட்டியபோது, அவர்களுடைய மதத்தலைவர்களால் அவர்கள் தவறாக வழிநடத்தப்பட்டனர். பின்னர் பவுல் தனது ஊழியத்தை புற இனத்தாரிடம் திருப்பியபோது, நித்தியஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும் விசுவாசித்ததினால் ஒரு சபை உருவானது. பவுலும், பர்னபாவும் பலவந்தமாக அந்தப் பிரதேசத்தை விட்டுத் துரத்தப்பட்டாலும், சீடர்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலில் வளர்ந்து வந்தார்கள் (அப். 13:44-52).

இந்த விஷயத்திலிருந்து பவுல் பின்வரும் செயல்வடிவத்தைக் கற்றுக்கொண்டார்: பக்தியுள்ள யூதர்களுக்கும், புற இனத்தவர்களுக்கும் சுவிசேஷத்தைத் தெளிவாக அறிவித்தல், சில யூதர்களின் ஆரம்ப ஆர்வம், புற இனத்தவரின் பரவலான வரவேற்பு, மற்ற யூதத் தலைவர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு மற்றும் “சந்தோஷத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் நிறைந்த” சீடர்கள் நிறைந்த வளரும் திருச்சபை நிறுவப்படுதல். சுவிசேஷத்தின் தாக்கத்தை எதுவும் தடுக்க முடியாது என்பதை தெளிவாகக் கண்டறிந்த அவர், ரோமப் பேரரசு முழுவதுக்கும் இந்த செயல்வடிவத்தை மகிழ்ச்சியுடன் மீண்டும் மீண்டும் பயன்படுத்தினார்.

பிசீதியாவின் அந்தியோகியாவில் பவுல் நிறுவிய சபை வெறுமனே மறைந்து போகவில்லை. அப்போஸ்தலர்கள் வேறு இடங்களுக்குச் சென்றபோதும், அவர்கள் நாட்டிய விசுவாசம் ஆழமாக வேரூன்றியது. பவுல் தனது இரண்டாவது மற்றும் மூன்றாவது ஊழியப் பயணங்களில், சீடர்களைத் திடப்படுத்த அந்த நகரத்திற்கு மீண்டும் விஜயம் செய்தார். அந்தச் சபை வளர்ந்து, ஆசியா மைனரில் ஒரு முக்கிய கிறிஸ்தவ மையமாக மாறியது. அங்கு அகழ்வாராய்வில் இடிபாடுகள் மத்தியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கம்பீரமான ஆரம்பகால கிறிஸ்தவ ஆலயம் அதன் முக்கியத்துவத்திற்கு மிகப் பலத்த ஆதாரமாக காணப்படுகிறது. பவுலின் விஜயத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு கட்டப்பட்ட இந்தப் பெரிய ஆலயம், அந்த சபை வளர்ந்து, பைசண்டைன் காலம் வரை நிலைத்திருந்த ஒரு நிலைநாட்டப்பட்ட மற்றும் செல்வாக்குமிக்க நிறுவனமாக மாறியதற்குச் சான்றாகும்.

> **பகையான சூழ்நிலையிலும் கூட இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தெளிவாக அறிவிக்கும் தைரியம் நமக்குத் தேவை**

கி.பி. 518இல் ஏற்பட்ட பயங்கர பூகம்பம் மற்றும் பரவலான கொள்ளை நோய்கள் (543-545 கி.பி.) காரணமாக நகரத்தின் வீழ்ச்சி தொடங்கியது. அந்த இடம் பின்னர் கைவிடப்பட்டு, இறுதியில் உள்ளூர் மக்களால் கற்கள் எடுக்கும் இடமாகப் பயன்படுத்தப்பட்டது. இன்று, நவீன துருக்கியிலுள்ள யால்வாக் (Yalvac) நகருக்கு அருகிலுள்ள இடிபாடுகள், பவுல் நிறுவிய சபையின் நீடித்த மரபுக்கு ஒரு வலுவான சான்றாக நிற்கின்றது.

நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

முதலாவதாக, பகையான சூழ்நிலையிலும் கூட இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தெளிவாக அறிவிக்கும் தைரியம் நமக்குத் தேவை. இயேசுவும், பவுலும் மற்றவர்களும் செய்ததுபோல, இந்தச் செய்தியை நிராகரிப்பதன் விளைவுகளை வெளிப்படுத்தும் துணிவும் நமக்குத் தேவை. இரண்டாவதாக, பவுல் முடிவுகளைப் பற்றிக் கவலைப்படாமல், தேவன் கொடுத்த செயல்வடிவத்தை நம்பியபோது, ரோமப் பேரரசு முழுவதும் தேவனுடைய ராஜ்யத்தை முன்னெடுப்பதில் வெற்றிப்பெற்றார். யூதர்களின் எதிர்ப்பைக் குறைப்பதற்காக அவர் தனது உத்தியை மாற்றிக்கொள்ளவில்லை. அதுபோலவே, நம்முடைய அனுபவத்தையோ, ஞானத்தையோ நம்பியிருக்காமல், தேவன் கொடுத்த தரிசனத்திற்கும், அவருடைய வழிநடத்துதலுக்கும் உண்மையுள்ளவர்களாயிருந்தால் நாமும் வெற்றியடைவோம்.

-4ஆம் பக்கத் தொடர்ச்சி

*முடிவு:*

யூதா கோத்திரத்தின் அடையாளமாக ஆளுமைத்திறன் கொண்ட சங்கம் உள்ளது. 12 கோத்திரங்களுக்குள்ளே மிகப்பெரிய கோத்திரமாக, ஆதிக்கம் செலுத்தும் கோத்திரமாக யூதா அறியப்படுகிறது (எண். 1, எண். 26). தன் சகோதரர் எல்லாருக்குள்ளும் சிறந்த வெற்றியாளர்களை (தாவீது) கொண்ட கோத்திரமாக யூதா விளங்குகிறது. தாவீது பெற்ற வெற்றிகள் 2 சாமு. 8ஆம் அதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ளது. தன்னுடைய எல்லா சத்துருக்களின் கைக்கும், சவுலின் கைக்கும் நீங்கலாக்கி விடுவித்த நாளிலே, தாவீது பாடிய சங்கீதத்திலே தகப்பனின் ஆசீர்வாதம் நிறைவேறும்படியான வார்த்தை (பிடரி) குறிப்பிடப்பட்டுள்ளது. "என் சத்துருக்களின் பிடரியை எனக்கு ஒப்புக்கொடுத்தீர்" (சங். 18:40, 2 சாமு. 22:41). யூதா கோத்திரத்திற்கு இருக்கும் அரச அதிகாரம், சட்டப்பூர்வ ஆதிக்கம் மற்றும் ஆட்சி செய்யும் அதிகாரத்தைக் கொண்ட செங்கோல், சமாதான கர்த்தரான மேசியா வரும்வரை நீக்குவது இல்லை என்ற ஆசீர்வாதம் கி.பி 7இல் நிறைவேறியது. ஆம்! இயேசு கிறிஸ்து ஊழியத்தைத் தொடங்குவதற்கு சற்று முன்பு யூதர்கள் தங்களுக்கான சட்டத்தை இயற்றும் அதிகாரத்தை இழந்தனர். 930 BC முதல் 721 BC வரையிலான ஒரு நீண்டகால ஆளுகையை யூதர்கள் பெற்றிருந்தனர். இந்தக் காலங்களில் ஏற்பட்ட பல்வேறுவிதமான யுத்தங்களிலும் கர்த்தர் துணை நின்று அவர்களை வெற்றியாய் நடத்தினார். அவர்கள் கர்த்தரை நோக்கி கூப்பிட்டபோதெல்லாம் கர்த்தர் கேட்டு அவர்கள் இக்கட்டுகளை நீக்கினார். இவ்வாறு தலைவனின் தரிசனம் யூதாவில் நிறைவேறியது.

பிரியமானவர்களே! யூதாவின் Self correction அவனுடைய கோத்திரத்திற்கு உன்னத மகிமையையும், சிறப்பையும், அதிகாரத்தையும் அளிக்கும் ஆளுகையைக் கொடுத்தது மாத்திரமல்ல, என்றென்றும் இவ்வுலகத்தை அரசாட்சி செய்யப்போகும் ராஜாதி ராஜாவான நம் ஆண்டவருடைய ஆயிரவருட அரசாட்சிக்கும் இவ்வுலகம் காத்திருக்கிறது. தவறுகளைத் திருத்திக்கொள்ளுதல் தேவத்திட்டங்களை நிறைவேற்றுகிறது. தவறுகளைத் திருத்திக்கொள்ளும் முயற்சிகள் நம்மிடையே காணப்படுகிறதா? Not Justify, but Rectify.

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." (நீதி. 28:13)

**IF YOU MAKE A MISTAKE, CORRECT IT, DON'T JUSTIFY IT.**

# ரெட்ஹில்ஸ் வாலிபர் ஜெபக்குழுவின் ஆரம்பமும், வளர்ச்சியும்...

2024ஆம் ஆண்டு நடந்த மாநில முகாமில் கலந்துக்கொண்ட ரெட்ஹில்ஸ் வாலிபர்கள் புதிதாக ஜெபக்குழு அமைத்து நடத்த அர்ப்பணித்தனர். அடுத்த சில மாதங்களில் புதிதாக ஜெபக்குழு நடத்த அர்ப்பணித்த வாலிபர்களுக்கென்று ஒரு கூடுகை நடத்தி, Areawise அவர்களைப் பிரித்து ஜெபம் நடத்த ஊக்கப்படுத்தினர். இதில் ஆண்கள் 5 இடங்களிலும், பெண்கள் 1 இடத்திலுமாக மாதம் 2 முறை ஜெபிக்க ஒப்புக்கொண்டனர். இதைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டு Areawise நடந்த Youth Retreatயில் கலந்துக்கொண்ட வாலிபர்களும் இவர்களோடு ஜெபக்குழுவில் இணைந்து ஜெபித்து வருகின்றனர். மேலும் இவர்கள் FMPBயின் மூலம் நடக்கும் கூடுகைகளில் தங்களைத் தன்னார்வலராக இணைத்துக்கொண்டு உதவிச்செய்து வருகின்றனர். மாதந்தோறும் நடைபெறும் இந்த வாலிபர் ஐக்கிய கூடுகையானது ஜெபக்குழுக்கள் இன்னும் வலுப்பெறவும், ஜெபக்குழுக்களில் இன்னும் அதிகமாய் ஜெபிக்கவும், ஊழியம் செய்யவும் ஊக்கப்படுத்துவதாய் அமைகிறது. தலைவர்களாயிருந்து ஜெபக்குழுக்களை நடத்தும் இந்த வாலிபர்கள் மூத்த அண்ணன்மார்களுடன் இணைந்து இக்கூடுகைகளை நடத்த வேண்டும் என்பதே எங்களுடைய நோக்கம். இவர்களுக்குச் சிறுவர் ஊழியத்திலும் ஆர்வம் உள்ளதைக் கண்டு ரெட்ஹில்ஸ் பகுதியிலுள்ள அங்கத்தினர்களின் பிள்ளைகளை இணைத்து Childrens Retreat ஒன்றை நடத்தினோம். இந்த ஊழியத்திற்காக வாலிபர்கள் Google Meetயில் 7 பேராக இணைந்து இரவில் ஜெபித்து வருகிறார்கள்.

இந்த ஜெபக்குழு நடத்தும் வாலிபர்கள் ஜெபம் செய்வதிலும், தனிப்பட்ட வாழ்க்கையில் பல ஆசீர்வாதங்களையும் பெற்றுள்ளனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!



# இயேசுவின் உயிர்த்தெழுதல்

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடித்தளமாகும். இயேசு சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, பின் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பது வேதாகமத்தின் உறுதியான சாட்சியாகும். இந்த நிகழ்வு சாதாரண ஒன்றல்ல; இது தேவனுடைய பேராற்றலையும், மனிதகுலத்திற்கு அவரளித்த இரட்சிப்பின் உறுதியையும் வெளிப்படுத்துகிறது.

ஒருமுறை ஞாயிறுபள்ளி ஆசிரியர் ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தார் என்ற வசனத்தை கற்றுக்கொடுக்கும் போது, ஒரு மாணவன் எழுந்து, தேவனோடு சஞ்சரித்தல் என்றால் என்ன? என்று கேட்டான். அதற்கு அந்த ஆசிரியரின் பதில் தேவன் ஏனோக்கின் வீட்டிற்கு எப்போதும் வந்து சென்றார். ஒருநாள் தேவன் தனது வீட்டிற்கு வரும்படி ஏனோக்கை அழைத்தார். அங்கே சென்ற ஏனோக்குக்கு நித்தியானந்த மகிழ்ச்சி. பின்பு தேவன் ஏனோக்கை அவன் வீட்டிற்கு செல்லும்படி கூறினார். ஆனால் ஏனோக்கு போக மறுத்து, தேவனுடைய வீட்டிலேயே தங்கிவிட்டார் என பதில் உரைத்தாராம். இதைப்போல பரிசுத்த பவுல் எப்படியாயினும் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து, கிறிஸ்துவோடு ஐக்கியமாவேன் என்கிறார்.

**உயிர்த்தெழுதல் - தேவனுடைய வல்லமையின் வெளிப்பாடு:**

அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்'' (மத்தேயு 28:6)

மரணம் என்பது மனிதனுக்கான கடைசி எல்லையாக கருதப்படுகிறது. ஆனால் இயேசு மரணத்தைவென்று உயிர்த்தெழுந்ததன் மூலம், மரணம் வெல்லப்பட்டது; இருள் ஒளியாக மாறியது. இதன் மூலம், தேவன் எல்லாவற்றுக்கும் மேலானவர் என்பதும், மரணத்திற்கே முடிவு வைத்தவர் என்பதும் வெளிப்படுகிறது.

**உயிர்த்தெழுதல் - பாவ மன்னிப்பின் அடையாளம்:**

''அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.'' (ரோமர் 4:25)

மனிதன் பாவத்தினால் தேவனிடமிருந்து பிரிந்தான். பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் தமது இரத்தத்தைச் சிந்தி மனிதனின் பாவத்திற்கான தண்டனையை அவரே ஏற்றுக்கொண்டார். அவர் உயிர்த்தெழுந்ததன் மூலம், நமக்கு பாவ மன்னிப்பும், புதிய வாழ்வும், நித்திய நம்பிக்கையும் கிடைத்துள்ளது.

**உயிர்த்தெழுதல் - நித்திய வாழ்வின் நம்பிக்கை:**

''நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.'' (யோவான் 11:25)

இயேசு உயிர்த்தெழுந்ததால், அவரை நம்புகிறவர்களும் ஒருநாள் உயிர்த்தெழுவார்கள் என்ற நம்பிக்கை கிடைக்கிறது. ''நான் உயிர்த்தெழுதலும் ஜீவனும்'' என்ற இயேசுவின் வார்த்தை, இந்த நம்பிக்கையின் அடிப்படையாகும். இயேசுவை நம்புகிறவர்களுக்கு மரணம் ஒரு முடிவல்ல; அது நித்திய வாழ்வின் தொடக்கம். இது விசுவாசிகளுக்கு ஒருநாள் உயிர்த்தெழுதல் உண்டு என்பதை உறுதி செய்கிறது.

**உயிர்த்தெழுதல் - வாழ்க்கையை மாற்றும் வல்லமை:**

''அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறிய விரும்புகிறேன்.'' (பிலி. 3:10)

பவுல், உயிர்த்தெழுதலின் வல்லமை மனித வாழ்க்கையை மாற்றும் என்று வலியுறுத்துகிறார். இயேசுவின் சீடர்கள், அவருடைய மரணத்திற்குப் பிறகு பயந்து மறைந்திருந்தனர். ஆனால் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அவர்கள் தைரியமாக நற்செய்தியை அறிவித்தார்கள். இந்த மாற்றம் உயிர்த்தெழுதலின் வல்லமையை நமக்குக் காட்டுகிறது. அதேபோல், இன்றும் இந்த வல்லமை நம்மை பழைய வாழ்க்கையை விட்டு விட்டு, புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க ஊக்குவிக்கிறது

**உயிர்த்தெழுதல் - மரணத்தின் மீது வெற்றி:**

''மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?'' (1 கொரி. 15:55)

இயேசுவின் உயிர்த்தெழுதல் மரணத்தின் அதிகாரத்தை முறியடித்து, நமக்குப் புதிய வாழ்வை அளிக்கிறது. வாழ்க்கையில் துன்பங்கள், இழப்புகள், சோதனைகள் வந்தாலும், இயேசு உயிரோடிருக்கிறார் என்ற உண்மை நமக்கு உற்சாகத்தையும், நம்பிக்கையையும் தருகிறது. அவர் எப்போதும் நம்மோடிருக்கிறார் என்ற நிச்சயத்தை இது அளிக்கிறது.

**முடிவாக, இயேசுவின் உயிர்த்தெழுதல் ஒரு வரலாற்றுச் சம்பவமாக மட்டுமல்ல; அது ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையையும் மாற்றக்கூடிய உயிருள்ள சத்தியமாகும். இன்றும் இயேசுவின் உயிர்த்தெழுதலின் வல்லமை தேவ ஜனங்களுக்குள் ஆளுகை செய்கிறது. மிஷனெரிகள் பணியாற்றும் பணித்தளங்களில் ஒரு சிலர் மரித்து உயிரோடு கூட எழுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆகையால், நாம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நம்பி, அவருடைய வழியில் நடந்து, நம் வாழ்க்கையை புதிதாக்கிக்கொள்வோம். பவுலைப் போல நாம் உயிர்த்தெழுதலின் வல்லமையில் வாழ நம்மை அர்ப்பணிப்போம்.**



HANDLE WITH CARE

## RIGHT FOUNDATION

BUILD ON THE

# ஞானத்துடன் காத்திருக்கிறேன்

**புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். (மத்தேயு 25:4)**

இன்ஸ்டாகிராமை ஸ்க்ரால் செய்து கொண்டிருந்தான் அந்த இளைஞன். தங்க மோதிரங்கள், திருமணத்திற்கு முந்தைய சூட்டுகள், போட்டோக்கள், எதிர்கால கனவுக் குடும்பப் படங்கள்... இதோடு சமீபத்தில் திருமணமான அவனுடன் படித்த FRIEND...

அவனுடைய CHURCHயைச் சேர்ந்த ஒருவருக்கு சமீபத்தில் நடந்த நிச்சயதார்த்தம். இப்போது அவன் மனதில் ஓர் எண்ணம்... என் நேரம் எப்போது வரும்?

ஆம்! காத்திருப்பது என்பது அவ்வளவு எளிதானல்ல... குறிப்பாக நம்மைச் சுற்றியுள்ள அனைவரும் வேகமாக அடுத்தகட்ட வாழ்விற்குச் செல்லும் பொழுது நமக்குள் பல கேள்விகள் எழுகின்றன... இங்கு தான் நம் ஆண்டவர் இயேசு சொன்ன 10 கன்னிகைகளின் உவமை மிகப் பொருத்தமானது. இதில் 5 பேர் புத்திசாலிகள், 5 பேர் புத்தி இல்லாதவர்கள். வித்தியாசம் அழகில் இல்லை... திறமையில் இல்லை... பின்னணியிலும் இல்லை... வித்தியாசம் ஆயத்தமில்லாமல் இருந்ததுதான். பத்து கன்னிகைகளும் மணமகன் வருகைக்காக காத்திருந்தனர். ஆனால் 5 பேர் மட்டுமே தயாராக இருந்தனர். புத்தியுள்ளவர்கள் விளக்குகளில் கூடுதல் எண்ணெய் எடுத்துச் சென்றனர். புத்தியில்லாதவர்கள் மணமகன் விரைவில் வருவார் என்று நினைத்தார்கள். ஆனால் அவர் தாமதித்தபோதோ விளக்குகள் அணைந்தன. அந்த ஆயத்தமில்லா தருணத்தில் தான் அவர்கள் கொண்டாட்டத்தைத் தவறவிட்டனர்.

**திருமணம் என்பது சரியான ஒருவரைக் கண்டுபிடிப்பது மட்டுமல்ல. சரியான நபராக நாம் மாறுவது**

- பலர் "ஆண்டவரே எனக்கு ஒரு நல்ல, ஏற்ற கணவனை / மனைவியைக் கொடுங்கள் என ஜெபிக்கின்றனர். ஆனால் சிலரே "கடவுளே என்னை ஒரு ஞானமுள்ள மனைவியாக / கணவனாக உருவாக்குங்கள் என்று ஜெபிக்கின்றனர்.
- பலர் "ஆண்டவரே எனக்கு ஒரு தேவ பக்தியுள்ள பெண்ணை / ஆணைத் தாரும் என்று ஜெபிக்கின்றனர். ஆனால் சிலரே "ஆண்டவரே என்னை ஒரு தெய்வீக மனிதனாக உருவாக்குங்கள் என்று ஜெபிக்கின்றனர்.

உவமையில் உள்ள எண்ணெய் என்பது, ஆழமான ஒன்றை உணர்த்துகிறது. அதாவது, நம்முடைய தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கை, குணம், உணர்ச்சி, முதிர்ச்சி, மன்னிக்கும் திறன், பொறுமை, ஜெப வாழ்க்கை மற்றும் சுயக் கட்டுப்பாடு என்பவையாகும்.

அந்த எண்ணையை நான் வேறொருவரிடமிருந்து கடன் வாங்க முடியாது. என் நண்பரின் ஆவிக்குரிய வாழ்வை நான் கடன் வாங்க முடியாது. என் போதகரின் விசுவாசத்தை நான் கடன் வாங்க முடியாது. என் வருங்கால வாழ்க்கைத் துணையின் குணநலன்களை நான் கடன் வாங்க முடியாது.

காத்திருக்கும் காலம் என்பது தயாராகும் / ஆயத்தமாகும் காலம். இன்று தமிழ்நாட்டில் பல கிறிஸ்தவ இளைஞர்கள் குடும்ப அழுத்தம், ஆலய அழுத்தம், வயது அழுத்தம் போன்ற அழுத்தங்களை உணர்கிறார்கள். சிலர் மற்ற அனைவரும் திருமணம் செய்து கொள்கிறார்கள் என்பதால் அவசரமாக திருமண உறவுக்குள் விரைகிறார்கள். சிலர் அதிக காலம் காத்திருக்க மனதில்லாமல், ஆவிக்குரிய தரங்களைச் சமரசம் செய்கிறார்கள். சிலர் தனிமை பாரமாக இருப்பதால் உணர்ச்சி வசப்பட்டு தீர்மானம் எடுக்கின்றனர்.

ஆனால் உண்மை என்ன?... தேவன் ஆயத்தம் செய்ததை அவசரப்படுத்தாதீர்கள். உவமையில் மணமகன் தாமதித்தார். அந்த தாமதம் யார் தயாராக இருந்தார்கள் என்பதை வெளிப்படுத்தியது. சில நேரங்களில் கர்த்தர் தாமதிப்பது நம்மைத் தண்டிக்க அல்ல, நம்மை தயார்ப்படுத்த...

- இன்று திருமணம் நடந்தால் நீங்கள் உணர்ச்சி அளவில் உறுதியாக இருக்கிறீர்களா?
- கடந்த கால காயங்களிலிருந்து விடுபட்டிருக்கிறீர்களா?
- பிரச்சினைகள், சண்டைகள் வரும்பொழுது கூச்சலிடாமல் கையாள முடியுமா?
- ஈர்ப்புகள் மங்கும்பொழுது உங்கள் துணைக்கு உண்மையாக இருக்க முடியுமா?
- தேவனின் திட்டத்தை மதித்து அதற்கு கீழ்ப்படிந்து நடக்க முடியுமா?

காத்திருப்பது ஒரு நாளும் வீண் போகாது. அது நமக்குள் புரிந்து கொள்ளுதலின் ஆழத்தை உருவாக்குவதாகும். புத்தியுள்ள பெண்கள், நேரம் வந்தபொழுது அமைதியாக இருந்தார்கள். அவர்கள் பீதியோ, பதட்டமோ அடையவில்லை. மாறாக, தயாராக இருந்தார்கள். திருமணத்தில் நுழையும் நமக்கு ஏங்கிய மனநிலையோ, பயமோ இல்லாமல் தயாராக நுழைய வேண்டும். நம் கையில் எண்ணையுடன் நிலையான ஜெப வாழ்க்கை, வலுவான குடும்ப கட்டமைப்பு மற்றும் குணமடைந்த உணர்வுகளுடன் துவங்குவதே கிறிஸ்துவின் தெளிவான அடையாளம்.

உலகம் சீக்கிரம் யாரையாவது கண்டுபிடி என்கிறது. இயேசுவோ என்னுடைய வேளை வரும்வரை ஆயத்தமாக இரு என்கிறார். எனவே எனக்கு எப்பொழுது திருமணம் நடக்கும் என்பதற்கு பதிலாக நான் காத்திருந்ததனால் பூரண வளர்ச்சியடைந்துள்ளேனா? என்று கேட்போம். திருமணம் ஓர் மகிழ்வான நிகழ்வு தான். ஆனால் நான் அதில் மகிழ்வுடன் நுழைகின்றேனா? என்பதை நம்முடைய ஆயத்தங்களே தீர்மானிக்கிறது. சரியான நேரம் வரும் பொழுது நீங்கள் எண்ணெயைத் தேடி அலைய வேண்டியதில்லை. "நீங்கள் பிரகாசிப்பீர்கள்..."


MRS. VASANTHI EMMANUEL

# இழுவலை உவமை

REV. K. KINGSLEY JOHN

4th WEEK MESSAGE - GOSPEL - ராஜ்ய களம்

*(மத்தேயு 13:47-50 அடிப்படையில்)*

மீட்பர் இயேசு கிறிஸ்து தமது போதனைகளை உவமைகளால் விளக்கினார். அவர் சொன்ன வலையிறக்க உவமை (மத். 13:47-50) பரலோக ராஜ்யத்தின் கடைசி நியாயத்தீர்ப்பைச் சித்தரிக்கிறது. இந்த உவமை நம்மை ஆழமாக சிந்திக்கத் தூண்டுகிறது. இந்த உலகம் ஒரு பெரிய கடலில் மூழ்கியிருக்கும் வலையைப் போன்றது. இறுதியில் நல்லது கெட்டதிலிருந்து பிரிக்கப்படும்.

## உவமையின் சாரம்:

“அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்ட, சகல விதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. வலை நிறைந்தபோது, அதை கரையில் இழுத்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள். இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு வந்து, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்” (மத். 13:47-50).

இந்த உவமையில், வலை பரலோகராஜ்யத்தைக் குறிக்கிறது. அது உலகெங்கிலும் பரவி, நல்லவர்களையும் (நீதிமான்கள்), கெட்டவர்களையும் (அநீதியாளர்கள்) சேர்த்துக்கொள்கிறது. மீனவர்கள் தேவனின் ஊழியர்களையும், கடைசி நாளில் இயேசு கிறிஸ்துவாகிய நியாயத்தீர்ப்பாளரையும் குறிக்கிறார்கள். கரைக்குக் கொண்டுவருவது இறுதி நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. அங்கு நல்ல மீன்கள் (நல்லவர்கள்), கூடையில் (பரலோகம்) சேர்த்து வைக்கப்படும். கெட்டவை (தீயவர்கள்) வெளியே எறியப்பட்டு (நரகம்) அக்கினியினால் சுட்டெரிக்கப்படும்.

## ஆவிக்குரிய பாடங்கள்:

உலகம் கலப்பானது: உலகில் நல்லவர்களும், தீயவர்களும் கலந்திருக்கிறார்கள். இது உலகில் இருக்கும் நமக்குக் கண்டறிவது அரிதான காரியம். ஆனால் இது தேவனுக்கு மாத்திரமே தெரியக்கூடிய ஒன்றாகும்.

கடைசி பிரிவு: கடைசி நாள் வரும்போது இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு இறங்கி வந்து நல்லவர்களையும், தீயவர்களையும் கண்டறிந்து, வேறு பிரித்து, நல்லவர்களைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு பரலோக ராஜ்யத்திற்கு அவர்களை அழைத்துச் செல்வார். ஆனால் தீயவர்களையோ, அழுகையும் பற்கடிப்புமுள்ள பிசாசுக்கும், அவனுடைய சேனைக்குமென்று உருவாக்கப்பட்ட அக்கினியிலே அவர்களைப் போட்டுவிடுவார்.

ஆயத்தமாக்குதல்: இந்த உவமை நம்மை எச்சரிக்கின்றது. நம் வாழ்வு இயேசு கிறிஸ்து எதிர்பார்க்கும் விதமாக இருக்கின்றதா என்று சிந்தித்துப் பார்க்க நாம் அழைக்கப்படுகிறோம். பலர் சபையில் இருந்தாலும் உண்மையான விசுவாசம் அவர்களிடத்தில் காணப்படுவதில்லை. தேவனுடைய கிருபையை நாம் நாடும்போது மாத்திரமே அதை எளிதாக அடைய முடியும்.

## நமது பதில்:

இந்த உவமை நம்மை சந்தேகப்பட வைக்கிறது. நான் நல்ல மீனா? அல்லது கெட்ட மீனா? இயேசு சொன்னார், “*அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்” (மத். 22:14)*. இன்றே நாம் ஆண்டவரிடத்தில் “*ஆண்டவரே உம்முடைய கிருபையினிமித்தம் எங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னியும்*” என்று கேட்போம். அவருடைய வருகையை எதிர்நோக்குகின்றவர்களாய் நல்ல காரியங்களை மாத்திரமே செய்ய ஆயத்தப்படுவோம்.

மத். 13:47-50இல் காணப்படும் இழுவலை உவமை வானராஜ்யத்தின் பரம அழைப்பையும், இறுதி நியாயத்தீர்ப்பின் நிச்சயத்தையும் நமக்கு நினைவூட்டுகிறது. இது விசுவாசிகளை நீதியான வாழ்க்கை வாழவும், தேவனுடைய ராஜ்யத்தை உலகத்திற்கு அறிவிக்கவும் ஊக்குவிக்கிறது.

ஆகவே, அவருடைய ராஜ்யத்திற்கென்று நம்மை ஆயத்தபடுத்திக் கொள்வோம். இறுதிநாள் வரும்போது அவரோடு கூட இணைந்து, பரலோகராஜ்யத்தை சேருகின்றவர்களாயிருப்போம். ஆண்டவர்தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்!



# கனம் பெற்ற
# (அரிமத்தியா) யோசேப்பு

REV. ALBERT PRABHAKARAN

வார்த்தைக் களம்

அரிமத்தியா ஊரின் ஆலோசனைக்காரன்,
சனகெரிம் மன்றத்தின் சமநிலை ஊழியன்,
சமூகத்தின் பார்வையில் சத்தியசீலன்,
மலடியையும் மனதார நேசித்த எல்க்கானாவின் இடத்துக்குச் சொந்தக்காரன்,
சரித்திரப் புருஷன் சாமுவேலின் மண்வாசம் கொண்டவன்.


உத்தம நெஞ்சன் - உயிருள்ள தேவனுக்கு இரகசிய சீடன்,
செல்வச் சீமான் - சிந்தை தெளிந்த சத்தியப் பெருமான்,
தேவராஜ்யம் வரத் தீவிரித்து காத்திருந்தவன்,
மேசியா "இயேசுவே" என நெஞ்சம் ஏற்றிருந்தவன்,
புகழ், மயக்கம் விடுத்து புத்தி தெளியும் நல்லொளியைக் கண்டவன்.

அதிகாரத்திலும் நேர்மை - அறத்திலும் மனத்தூய்மை,
சதி செயலுக்கும், துர்ச்செயலுக்கும் தூரமானவன்,
ஒளிந்த சீடர்களுக்கிடையில் உலகிற்கு தனைக் காட்டியவன்,
உலகப் பயம் விலக்கி உன்னதருக்கு நல்லடக்கத்தை நல்கியவன்,
புதிய கல்லறையைப் புனிதருக்கு சொந்தமாக்கியவன்,
மதியுரை தோழன் நிக்கொதேமுவின் உறுதுணை பெற்றவன்.

நித்தியரை வழிபடும் நிலவறைக் கைதிகள்,
கடினத்திலும் கடமை தவறா யோசேப்புகள்,
சிறப்பானதைச் சீர் இயேசு நாதனுக்குப் படைத்திடும் நிக்கொதேமுக்கள்,
மறைமுக சீடத்துவம் மண்ணில் இன்னும் மறையவில்லை.

விளம்பரமின்றி, விலைப்பட்டையின்றி, வீண் அலம்பலின்றி,
இருள் விலக்கும் நிஜ உலகின் தீச்சுடர்களாய்,
கொடிய பகைமையை வேரறுக்க ஜெபவாள் ஏந்திய போர்வீரர்களாய்,
அணிவகுக்கும் ஜாமக்காரர்கள் ஆயிரங்கள் உண்டு.

அகம் திடன் கொள் திருச்சபையே!
யுகத்தின் நிலவறை யோசேப்புகளை உலகிற்குக் காட்டிடு,
உண்மையும், உத்தமமும் - உறுதியும், உருநிலையும்,
சமநிலையாகட்டும், புது சரித்திரமாகட்டும்,
உள்ளவர் எல்லாம் உன்னதருக்கே என்ற வெற்றி முரசு முழங்கட்டும்!





# இயேசு கிறிஸ்துவின் சீஷன் யோவான்



**அறிமுகம்:**

யோவான் ஒரு யூதக் குடும்பத்தில் பிறந்தார். இவர் முதலில் யோவான் ஸ்நானகனின் சீஷராக இருந்து, பின்னர் இயேசுகிறிஸ்துவின் அன்பிற்குரிய சீஷரானார். இவர் செபெதேயு மற்றும் சலோமி என்பவர்களின் குமாரனும், யாக்கோபின் இளைய சகோதரருமாவார். யோவான் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தார். தங்களது மீன்பிடித் தொழிலை விட்டுவிட்டு, தம்முடைய சீஷராக வருமாறு இயேசுகிறிஸ்து அவரை அழைத்தார். யாக்கோபு மற்றும் யோவான் ஆகிய இரு சகோதரர்களும் தங்கள் மீன்பிடித் தொழிலை விட்டுவிட்டு இயேசுகிறிஸ்துவின் சீஷர்களானார்கள்.

**சீஷனாகிய யோவானின் குறிப்பிடத்தக்க பண்புகள்:**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் யோவான் மிகவும் இளையவர் என்று நம்பப்படுகிறது. இவர் இயேசுகிறிஸ்துவிடம் மிகவும் நெருக்கமாக இருந்தார். இயேசு மறுரூபமான மலையிலும், யவீருவின் மகள் உயிரோடெழுப்பப்பட்ட நிகழ்விலும், கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் வேதனையான தருணத்திலும் யோவான் உடனிருந்தார். இறுதி விருந்தின் போது இயேசுவின் மார்பில் சாய்ந்து கொள்ளும் உரிமை அவருக்கு இருந்தது. "உம்மைக் காட்டிக்கொடுக்கப் போகிறவன் யார்?" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க கேள்வியை இயேசுவிடம் கேட்கும் அளவுக்கு யோவான் தைரியமானவராக இருந்தார். சீஷராகிய யோவானுக்கு "பொவனெர்கேஸ்" (Boanerges) என்ற புனைப்பெயர் இருந்தது, அதற்கு "இடி முழக்க மக்கள்" என்று பொருள். இந்த பெயர் அவருக்கு இருந்த வைராக்கியம் மற்றும் ஆற்றல்மிக்க இயல்பை உணர்த்துகிறது. யோவான் "இயேசுவுக்கு அன்பான சீஷர்" என்றும் அடையாளப்படுத்தப்படுகிறார். இது இயேசுகிறிஸ்துவுடனான அவரது தனிப்பட்ட மற்றும் ஆழமான உறவைக் காட்டுகிறது.

**இயேசுகிறிஸ்துவின் வாழ்வு மற்றும் ஊழியத்தை நேரில் கண்ட சாட்சி - யோவான்:**

யோவான் சிலுவைக்கு மிக அருகிலிருந்து இயேசுகிறிஸ்துவின் மரணத்தை நேரில் கண்டார். மேலும், இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்குப் பிறகு அவரது தாயாரைப் பராமரிக்கும் பொறுப்பு யோவானிடம் ஒப்படைக்கப்பட்டது. இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் பேதுருவுடன் இணைந்து யோவான் முக்கிய பங்கு வகித்தார். இவர்கள் இருவரும் இயேசுகிறிஸ்துவின் வெற்று கல்லறையை நேரில் கண்ட சாட்சிகளாவர்.

**திருச்சபை வரலாற்றில் யோவானின் பதிவுகள்:**

திருச்சபை வரலாற்றாசிரியர்கள் இவரை சுவிசேஷகர் யோவான், பத்மு தீவின் யோவான் மற்றும் அன்பான சீஷன் என்று அழைக்கிறார்கள். யோவான் புதிய ஏற்பாட்டில் 5 புத்தகங்களை எழுதியுள்ளார். அவர் யோவான் எழுதிய சுவிசேஷம், யோவான் எழுதிய முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிருபங்கள் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் ஆகியவற்றை எழுதினார். கி.பி. 44இல் இரத்தசாட்சியாக மரித்த தனது சகோதரர் யாக்கோபின் மரணத்திற்குப் பிறகு யோவான் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்ததாக நம்பப்படுகிறது. இறுதி பஸ்கா உணவிற்கான ஏற்பாடுகளைச் செய்ய பேதுருவுடன், யோவானையும் இயேசு அனுப்பினார். இயேசு கைது செய்யப்பட்ட பிறகு, எருசலேமில் உள்ள பிரதான ஆசாரியரின் முற்றம் வரை பேதுருவுடன் பின்தொடர்ந்து சென்ற ஒரே சீஷர் யோவான் மட்டுமே.

**சீஷராகிய யோவானின் தனித்துவம்:**

யோவான் இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பம் முதல் சீஷராக இருந்தார். மறுரூப மலை, அற்புதங்கள் நடந்த நேரங்கள், கெத்செமனே தோட்டம், சிலுவை மரணம் மற்றும் அவர் உயிர்த்தெழுந்தார் என்பதற்குச் சாட்சியாக வெற்று கல்லறை வரை உடனிருந்தார். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகும், தேவாலயத்தில் உள்ள சாலொமோனின் மண்டபத்தில் சப்பாணியைக் குணப்படுத்த யோவான் பேதுருவுடன் இருந்தார். அவர் பேதுருவுடன் சிறைத்தண்டனையையும் அனுபவித்தார் [அப். 4:3]. சமாரியாவிலுள்ள விசுவாசிகளைச் சந்திக்கும் ஊழியத்திலும் இவர் ஈடுபட்டார் [அப். 8:14]. பேதுரு மற்றும் யாக்கோபு ஆகியோருடன் இணைந்து யோவான் "திருச்சபையின் தூண்கள்" என்று அழைக்கப்பட்டார். இவர்கள் எருசலேம் சங்கத்தில் [அப். 15] பங்கேற்று, யூத பாரம்பரியம் மற்றும் மோசே நியாயப்பிரமாணம் குறித்த சிக்கல்களைத் தீர்த்து வைத்தனர். இது பவுல் மற்றும் அவரது குழுவினரின் புற இனத்தார் ஊழியத்திற்கு வழிவகுத்தது.

**யோவானின் மரணம்:**

யோவான் அப்போஸ்தலர்களில் இளையவர் மற்றும் அனைவரையும் விட அதிக காலம் வாழ்ந்தவர் என்று நம்பப்படுகிறது. அவர் முதிர்வயது வரை வாழ்ந்து, கி.பி. 98க்குப் பிறகு எபேசுவில் இயற்கையான முறையில் மரித்தார் என்று கூறப்படுகிறது. இதன் மூலம் இரத்தசாட்சியாக மரிக்காத ஒரே அப்போஸ்தலர் இவராவார்.

**யோவானின் வாழ்விலிருந்து இளைஞர்களுக்கான பாடங்கள்:**

உங்கள் இளமைக் காலத்தில் இயேசுகிறிஸ்துவின் தோழமையில் இணையுங்கள். இயேசுவிடம் நெருக்கமாக இருந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க இயேசுவின் அழைப்பையும், கட்டளையையும் புரிந்து கொள்ளுங்கள். அவருடைய ஊழியம், அற்புதங்கள், போதனைகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாக இருங்கள். அவருடைய சுவிசேஷத்தைப் பூமியின் கடைசி வரை கொண்டு செல்லுங்கள். இவர் இயேசுவின் "அன்பான சீஷராக" வாழ்ந்து முக்கிய சாட்சியாகவும், திருச்சபையின் தலைவராகவும் இருந்தார்.

**FMPB யோவானைப் போன்ற இளைஞர்களைத் தேடுகிறது:**

அன்புள்ள வாலிப சகோதர சகோதரிகளே, FMPB இயக்கமானது படைப்பாற்றல் மற்றும் ஆற்றல்மிக்க இளைஞர்கள் மிஷனெரிகளாக மாற அழைக்கிறது. நம் தேசத்திலுள்ள பல்வேறு இன மக்களிடையே இயேசுகிறிஸ்துவைப் பற்றிப் பகிர இது ஒரு சிறந்த வாய்ப்பாகும். நீங்கள் ஒரு ஆசிரியராகவோ, தொழில்நுட்ப வல்லுநராகவோ, மருத்துவப் பணியாளராகவோ, கல்வியாளராகவோ அல்லது கணினி விஞ்ஞானியாகவோ இந்த அமைப்பில் இணைந்து பணியாற்றலாம். உங்கள் அர்ப்பணிப்பின் மூலம் ஆண்டவருடைய நாமத்தை மகிமைப்படுத்துங்கள்.

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நடத்தும்

# தமிழ் மாநில முகாம் 2026

கருப்பொருள்: பேர் சொல்லி அழைப்பு (ஏசாயா 43:1)

**நாள்:** மே 21 முதல் 24 வரை

வியாழன் காலை 9:30 மணி முதல்
ஞாயிறு காலை 7:30 மணி வரை

**இடம்:** பெத்தேல் வளாகம்,
டேனிஷ்பேட்டை, சேலம்

## செய்தியாளர்கள்:

Dr. ராஜேஷ் டதி
Mr. G. ஜாண் சாமுவேல்
Rev. விஜய் பிரசன்னா ஐசக்
Mr. Y. நவநீதர்
Rev. J. ரூபன் சாமுவேல்
Rev. S. இம்மானுவேல் ரஞ்சித் சிங்
மற்றும் பணித்தள மிஷனெரிகள்

## சிறப்பு அம்சங்கள்:

பெரியவர்கள், இளம் தம்பதியினர், வாலிபர்கள், இளம் வாலிபர்கள், சிறுவர்களுக்கென தனித்தனி கூடுகைகள்.

## பதிவுக்கட்டணம்:

| பெரியவர்களுக்கு | சிறுவர்களுக்கு |
| --- | --- |
| ரூ.300/- | ரூ.200/- |

தரிசனமிகு பாடல்கள், அனலூட்டும் செய்திகள், ஊக்கமூட்டும் சந்தியா வேளைகள் மற்றும் பயனுள்ள பணித்தளப் பகிர்வுகள்.

ஆவிக்குரிய வாழ்வில் பெலப்படவும்,
மிஷனெரித் தரிசனத்தில் வளரவும்,
ஜெபக்குழுவாக, குடும்பமாக, சபையாக
**பங்குபெற அழைக்கிறோம்**

முகாம் முன்பதிவுக்கான QR குறியீடு

## முகாம் வளாகம் வந்தடைய...

- டேனிஷ்பேட்டை, பெத்தேல் வளாகம், சேலம் - பெங்களூர் நெடுஞ்சாலையிலுள்ள தீவட்டிப்பட்டியிலிருந்து 6 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.
- சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து பொம்மிடி, லோக்கூர், இராமமூர்த்தி நகர் செல்லும் பேருந்துகள் மூலமாக பெத்தேல் மருத்துவமனை பஸ் நிறுத்தத்தில் இறங்கி வரலாம்.
- ஜோலார்பேட்டை- ஈரோடு, ஈரோடு - ஜோலார்பேட்டை மார்க்கமாக இரயிலில் வருபவர்கள் டேனிஷ்பேட்டை இரயில் நிலையத்தில் இறங்கவும்.
- உங்கள் வருகை குறித்த தகவலை பயண ஒழுங்கிற்கான பொறுப்பாளர்களிடம் தெரிவித்தால் உங்களைச் சந்தித்து அழைத்து வருவார்கள்.
- மே 21-ம் தேதி அதிகாலை முதல் சேலம் இரயில் நிலையம், சேலம் பேருந்து நிலையம், தீவட்டிப்பட்டி, டேனிஷ்பேட்டை சந்திப்புகளில் உங்களுக்கு உதவி செய்ய தன்னார்வ உதவியாளர்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளார்கள்.
- பயண ஒழுங்கிற்குத் தொடர்பு கொள்ள:
  சகோ. A.ஞானதாஸ் - 90429 45090
  சகோ. P.ரத்னராஜ் - 94873 25000

- முகாம் வளாகத்திற்குள் ஆண்கள் தனியாகவும் பெண்கள் தனியாகவும் தங்குமிடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வேதாகமம், நோட்டு, பேனா, தட்டு, டம்ளர், போர்வை மற்றும் டார்ச்லைட் கொண்டு வாருங்கள்.
- மே 22 (வெள்ளிக்கிழமை) உபவாச ஜெபம் முடிந்த பின் மாலை 5.00 மணிக்கு உணவு வழங்கப்படும்.

தமிழ்நாடு மாநில அளவிலான
இளம் வாலிபர் மற்றும் வாலிபர்களுக்கான
வேதாகமம் மற்றும் மிஷனெரிச் சரிதை தேர்வு

## BAMB BIBLE AND MISSIONARY BIOGRAPHY EXAM - 2026

வயது வரம்பு: 13-30 வயது வரை

- ஏசாயா 40ஆம் அதிகாரம் முதல் 66ஆம் அதிகாரம் வரை
- 2026 மார்ச், ஏப்ரல், மே மாத கேரீத் பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ள மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு மற்றும் செய்திகள்
- மனப்பாட வேத பகுதி - ஏசாயா 53:1-12
- தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்வு நடத்தப்படும். (NKJV & NIV ஆங்கில வேதாகமம் பின்பற்றப்படும்)
- இடம்: பெத்தேல் வளாகம், டேனிஷ்பேட்டை, சேலம்
- தேர்வு நாள்: மாநில முகாமின் 2ஆம் நாள் (22.05.2026)
- தேர்வு நேரம்: இரவு 8:30 மணி முதல் 10:30 மணி வரை
- பரிசு பெற குறைந்தது 50 மதிப்பெண் எடுக்க வேண்டும்
- தேர்வில் முதன்மை பெறும் முதல் மூன்று நபர்களுக்குச் சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். மற்றவர்களுக்குத் தகுதிச் சான்றிதழ் அளிக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு:
FMPB YOUTH WING 9445040148

மே 24-ம் தேதி காலை திருவிருந்து ஆராதனையுடன் முகாம் நிறைவுபெறும்.

முகாம் முன்பதிவிற்கான மின்னஞ்சல் முகவரி:
annualcampfmpb2026@gmail.com

தொடர்புக்கு:
**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளிச் சாலை, அம்பத்தூர், சென்னை-600053
தொலைபேசி : 044-26570404, செல்: 9443039555,9488805454